Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 166 | செவ்வாய்க்கிழமை | சித்திரை 28 ஆம் நாள் 11 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## 2,573 பேர் தொற்றுடன் அடையாளம்

கொழும்பு, மே 11

இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 273 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று 17 ➤

## குருந்தூர் மலையில் திடீர் பூசை!

## விகாரைக்கான முன்னேற்பாடு?



### நேற்றிரவு பெரும் பதற்ற நிலைமை

யாழ்ப்பாணம், மே 11

தமிழ் மக்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு, தண்ணீர்முறிப்பு, குருந்தூர் மலையில் நேற்றிரவு இராணுவத்தினரின் பிரசன்னத்துடன், பிக்குகள் பிரித் ஓதி வழிபாடுகளை நடத்தியுள்ளனர். 19 ➤

## யாழ்ப்பாணத்தில் நேற்று 36 பேருக்கு தொற்று உறுதி

### எழுமாற்று பி.சி.ஆரில் பலர் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 36 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 37 பேருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ 19 ➤

## நாட்டின் நிலைமை மோசம் சர்வகட்சி கூட்டம் கூட்டுக

### பிரதான எதிர்க்கட்சி அவசர கோரிக்கை

கொழும்பு, மே 11

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி நாட்டு மக்களை பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக ஆராய்வதற்காக உடனடியாக சர்வகட்சி கூட் 19 ➤

## மாகாணங்கள் இடையே பயணிப்பதற்குத் தடை!

### ஜனாதிபதி அவசர பணிப்பு

யாழ்ப்பாணம், மே 11

தற்போதைய கொவிட் நிலைமையைக் கருத்தில் கொண்டு நேற்று நள்ளிரவு முதல் மே மாதம் 31ஆம் திகதிவரை அனைத்து மாகாணங்களுக்கும் இடையிலான போக்குவரத்துகளைத் தடை செய்யுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரி 19 ➤

முச்சந்தி முரளி



"என்னதான் கொரோனா கோரமா ஆடி உலகமே அழிஞ்சாலும், எங்கட ஏரியாவில விகாரை கட்டாட்டி நெஞ்சாங்கட்டை அவையளுக்கு வேகாது கண்டியளோ"

## நாட்டை முடக்கும் எண்ணம் இல்லை

### அரசு அறிவிப்பு

கொழும்பு, மே 11

நாட்டை முற்றாக முடக்குவது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று கொவிட் ஒழிப்பு செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 19 ➤

## தொற்று நிலைமையில் சத்திர சிகிச்சை முகாம்

### பல தரப்புகளும் விசனம்


TEACHING HOSPITAL JAFFNA

யாழ்ப்பாணம், மே 11

நாட்டில் கொரோனாத் தொற்று தீவிரம் பெற்றுள்ள நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பெரும் கண்புரை சத்திர சிகிச்சை முகாம் வெசாக் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சத்திர சிகிச்சை முகாம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில், அந்த சத்திர 19 ➤

## அரசின் பெயரைக் காப்பதற்காக மக்களை பணயமாக்க முடியாது

### கொரோனா கட்டுப்பாட்டை அமைச்சரவை பொறுப்பெடுக்க வேண்டும் என ரணில் அறிவுரை

கொழும்பு, மே 11

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுக்கள் தோல்விகண்டுள்ளன. அந்தக் குழுக்கள் மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை அதிகாரங்களைப் பொறுப்பேற்று பொறுப்புடன் தீர்மானங்களை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் 19 ➤

## மாணவர்கள் 6 பேருக்கு கிளிநொச்சியில் தொற்று

### பொலிஸார் 14 பேர் அடையாளம்

கிளிநொச்சி, மே 11

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கற்கும் 6 மாணவர்களுக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களுடன் தொடர்பைப் பேணி 19 ➤

## நெல்லியடியில் வெதுப்பக பணியாளருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், மே 11

நெல்லியடியில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றில் பணியாற்றும் ஒருவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடியில் உள்ள இந்த பிரபல வெதுப்பகத்தில் மக்கள் அதிகம் கொள்வனவில் ஈடுபடுவது வழமை என்பதால் 19 ➤

## பிரதேச செயலகங்களில் சேவைபெற முயலுங்கள்

### இடர் நிலையை உணர்ந்து செயற்படுமாறு யாழ். மாவட்டச் செயலர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 11

மக்கள் தற்போதைய இடர் நிலைமையை உணர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இயலுமானவரை பிரதேச செயலகங்களில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று யாழ் 17 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை மரங்கள் உங்களுக்கு பட்ட மரங்களா?

# மரங்களை வெட்டுவதற்கு எதிராக கிளர்ந்த மக்கள்

**கிளிநொச்சி, மே 11**

**ஒட்டுசுட்டானில், பச்சை மரத்தை அடியோடு தறிக்க முற்பட்ட அரச மரக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டைக் கண்டித்து பிரதேச மக்கள் நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.**



இரண்டு மரங்களும் சுமார் 30 வருடங்களுக்கும் மேற்பட்ட வளர்ச்சிக் காலத்தை கொண்டவை. மக்களின் எதிர்ப்பையடுத்து, குறித்த மரங்களைத் தறிக்கும் நடவடிக்கையை அரச மரக் கூட்டுத்தாபனம் கைவிட்டுள்ளது. எனினும், அவர்கள் மரத்தின் கிளைகளை வெட்டிவிட்டனர்.

இதேவேளை, குறித்த இரு மரங்களும் பட்ட மரங்கள் எனவும் அவற்றை அகற்றித் தருமாறும் கோரி ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ரி.அகிலன், கடந்த ஜனவரி 13ஆம் திகதியிடப்பட்ட கோரிக்கை கடிதம் ஒன்றை அரச மரக்கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளருக்கு பிரதேச செயலாளர் ரி.அகிலன் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதி ஒதுக்கீட்டுப் பகுதியில் இரண்டு இயவாகை மரங்கள் பட்டுப்போய் முறிந்து வீழ்ந்துவிடும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன என்றும் அவற்றை வெட்டி அகற்றுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று ஒரு கடிதத்தையும் பிரதேச மக்கள் ஆதாரமாக வைத்துள்ளனர். ஆனால், குறித்த மரங்கள் பட்ட மரங்கள் அல்ல என்பதும் அவை பச்சைப் பசேலென்று உயர்ந்து வளர்ந்துள்ளமையும் அவதானிக்க முடிகின்றது.

இயற்கையை பாதுகாக்கவேண்டிய இரு அரச திணைக்களங்கள் இவ்வாறு பொய்யான சான்றிதழ்களை பெற்று, சுற்றுச் சூழலை அழிக்க முற்படுவதானது பல்வேறு சந்தேகங்களை தோற்றுவிக்கின்றது. பச்சைப் பசேலென்று வளர்ந்து நிற்கும் மரங்களை பட்ட மரங்கள் என்று சான்று வழங்கி அதனை அகற்ற பிரதேச செயலர் ரி.அகிலன் எடுத்த முயற்சி தொடர்பில் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

மக்களின் குறித்த கடித விடயம் தொடர்பிலான குற்றச்சாட்டுத் தொடர்பில் பிரதேச செயலரின் பதிலைப் பெறமுடியவில்லை. (து-6)

அத்துடன், குறித்த இரண்டு மரங்களும் காய்ந்தமரம் என்று சான்றிதழ் வழங்கிய ஒட்டுசுட்டான் பிரதேச செயலரின் செயற்பாடு தொடர்பில் அவர்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முறிகண்டி இந்து வித்தியாலயம் முன்பாக காணப்பட்ட இரண்டு வீதியோர மரங்களே இவ்வாறு அடியோடு வெட்டி சரிக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை அரச மரக்கூட்டுத்தாபனம் என்று தங்களை அடையாளப்படுத்தியவர்களின் கண்காணிப்பில் தனிநபர்களால் ஒப்பந்தம் செய்யப்பட்டு நிழல்தரும் குறித்த இரண்டு மரங்களையும் அடியோடு அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முறிகண்டி அக்கராயன் பிரதான வீதியில் அமைந்துள்ள குறித்த

வற்றாப்பளை கண்ணகி ஆலய

## விசாகப் பொங்கலுக்கு 'பாக்குத்தெண்டல்'



முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் நிகழ்வை அறிவிக்கும் முதல் சடங்கான 'பாக்குத்தெண்டல்' நிகழ்வு நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள கண்ணகியம்மன் சந்நிதானத்தில் விசேட பூசைவழிபாடுகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து வைகாசி விசாகப் பொங்கல் வருகின்றது என்பதை பாரம்பரிய முறைப்படி அறிவிக்கும் பொருட்டு காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து, அதற்கென நியமிக்கப்பட்டுள்ளவர்கள் புறப்பட்டனர்.

அவ்வாறு புறப்பட்டவர்களால் ஊர் ஊராகச் சென்று சேகரித்த, வெற்றிலை, பாக்கு, மஞ்சள் மற்றும் நாணயக்குற்றிகள் முதலான மங்கலப்பொருள்கள் கட்டா விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் சந்நிதானத்துக்கு எடுத்துவரப்பட்டு, குறித்த மங்கலப்பொருள்கள் மஞ்சள் துணி ஒன்றால் சுற்றி, அம்மன் சந்நிதானத்துக்கு அருகே நாட்டப்பட்டிருக்கின்ற வேப்பமரத்தில் கட்டப்பட்டது.

இவ்வாறு வேப்பமரத்தில் கட்டப்பட்டுள்ள குறித்த மங்கலப் பொருள்கள், வைகாசி விசாகப் பொங்கல் அன்று அதிகாலை தீர்த்தம் மற்றும் மடப்பண்டம் உள்ளிட்ட பூசைப் பொருள்களுடன் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு மரபு வழியில் இவ் வருடத்துக்கான வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் ஆரம்பிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-246,19)

## கட்டுக்கரை குளத்திலிருந்து தண்ணீர் பாய்ச்சல் ஆரம்பம்

மன்னார், மே 11

மன்னாரில் சிறுபோக பயிர்ச் செய்கைக்கென கட்டுக்கரை குளத்திலிருந்து சமய வழிபாடுகளின் பின்னர் உத்தியோகபூர்வமாக நேற்றுத் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

கட்டுக்கரை குளத்தின் 11 ஆம் கட்டை பிரதான வாய்க்கால் கதவின் ஊடாகவே தண்ணீர் திறந்துவிடப்பட்டது. கட்டுக்கரை குளத்திலிருந்து தற்போது 7.11 அடி தண்ணீர் வான் பாய்ந்துகொண்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் இந்தமுறை 2ஆயிரத்து 578 ஏக்கர் நெற் பயிர்ச் செய்கையும், 400 ஏக்கர் மேட்டு நில பயிர்செய்கையும் மேற்கொள்வதற்காக 11,12,13ஆம் கட்டை மற்றும் சின்ன உடைப்பு, பெரிய உடைப்பு, அடைக்கல மோட்டை போன்ற பிரதான வாய்க்கால்களின் கதவுகளைத் திறந்துவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விவசாய ஆராய்ச்சி பண்ணைக்காக முருங்கன் 14 ஆம் கட்டை வாய்க்காலிலிருந்து தண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் கலந்துகொண்டு தண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைத்திருந்தார். (து-213)

## கிராமங்கள்தோறும் நடமாடும் வர்த்தகம்

*கிளிநொச்சி மாவட்டச் செயலர் பரிந்துரை*

கிராமங்கள் தோறும் நடமாடும் வர்த்தக நிலையங்களை அல்லது சந்தைகளை நடத்துவதன் மூலமாக, பொதுமக்களின் நடமாட்டத்தை குறைக்க முடியும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொவிட் தடுப்பு விசேட கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் அலுவலகத்தால் விடுவிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைவாக தற்பொழுது நிலவி வருகின்ற கொரோனாத் தாக்கம் காரணமாக எமது மாவட்டத்தில் ஏதாவது ஒரு பிரதேசம் முடக்கப்படும் சந்தர்ப்பத்தில் அத்தியாவசிய சேவைகளை வழங்குவது தொடர்பான ஒரு பொறிமுறையை உருவாக்கவேண்டிய தேவை இருக்கின்றது.

எனவே, மாவட்டத்தில் அவ்வாறான சூழ்நிலை ஏற்படுகின்றபோது, மக்களுக்கு அத்தியாவசிய தேவைகள் கிடைக்கக்கூடிய வகையில் கூட்டுறவுச் சங்கங்கள், சதொச மற்றும் வர்த்தக சங்கங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் அலுவலகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட ஆளணிகளுடன் பணிகளை முன்னெடுப்பதற்கும், குறிப்பாக அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுகின்ற அலுவலர்களைக்கொண்டு பணிகளில் ஈடுபடுமாறும் அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கின்றோம்.

வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோர் எந்த சந்தர்ப்பத்திலும் முகக் கவசங்களை அணிந்தவாறே வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். நுகர்வோரும் அவ்வாறான செயற்பாட்டிலேயே இருக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் எடுக்கப்படும் பி.சி.ஆர். மாதிரிகளை பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. தற்பொழுது இருக்கின்ற சூழலில் அதிகளவான பி.சி.ஆர். பரிசோத[illegible] மேற்கொள்ளவேண்டி [illegible] தேக்க நிலை காணப்படுகின்றது. - என்றார். (து-6)

## வாகனங்கள் மோதி விபத்து



முறிகண்டி பகுதியில் நேற்று முற்பகல் வாகனங்கள் மோதுண்ட விபத்தில் சிக்கி ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள இராணுவ சோதனைச்சாவடியில் தரித்துநின்ற வாகனத்தை கார் மோதியுள்ளது. அந்த வாகனம் அதன் முன்பாக தரித்துநின்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி தள்ளி எதிரே நின்ற டிப்பர் வாகனத்துடன் மோதியது என்று பொலிஸார் கூறினர்.

அதன்போது மோட்டார் சைக்கிளுடன் நின்ற ஒருவரே படுகாயமடைந்தார். அவர் உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (து-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலயங்களிலும் தனிமைப்படுத்துங்கள்

## கிறிஸ்தவ பேரவை பரிந்துரை

**கொழும்பு, மே 11**

**தேவாலயங்கள் மற்றும் தமது நிலையங்கள் என்பவற்றை தேவை யேற்படின் தனிமைப்படுத்தல் மையங்களாகவும், தடுப்பூசித் திட்ட நடவடிக்கைக்கும் பயன்படுத்த முடியும் என்று தேசிய கிறிஸ்தவ பேர வையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், நாம் சுகாதார அதிகாரிகளின் அறி வுறுத்தல்களை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். தனி மைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ள தினசரி ஊதியம் பெறுவோருக்கு ஏற்படும் தாக்கத்தை ஏற்றுக்கொள் வதுடன், இத்தகைய சூழ்நிலை களில் அவர்களுக்கான அடிப்படை நிதி உதவியை வழங்குவதற்கான சாத்தியத்தை நாம் ஆராயலாம். அதிகமான இலங்கையர்கள் நாடு திரும்ப முடியவில்லை. அவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை களில் ஒன்று இலங்கைக்குத் திரும்பியதும் தனிமைப்படுத்தலுக் கான வசதிகள் இல்லாமைதான். நாம் அனைத்து இலங்கையர்களை யும் குறிப்பாக அனைத்து கிறிஸ்த வர் களையும் இத்தகைய பொருளா தாரப் பின்னடைவிலி ருந்து மீளக் கொண்டு வருவதற்கான முயற்சிக ளில் பங்கேற்க முன்வருமாறு அழைக்கிறோம் - என்றனர். (ம-4)

# தொற்றாளர்களின் சாவுக்கு பொறுப்புக்கூறவேண்டும்

## அரசுக்கு எதிர்க்கட்சி அழுத்தம்

கொழும்பு, மே 11

தம்மிக்கவின் மருந்துப் பாணியை மக்களுக்கு பரிந் துரைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் கொரோனாவால் உயிரிழக்கும் ஒவ் வொருவருக்கும் அரசு பொறுப்புக்கூற வேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தொற்றிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான வழி முறைகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறியபோது இந்த அரசு அவரை விமர்சித்தது. இறுதியில் மூடநம்பிக்கைகளால் மக்களை ஏமாற்ற முயன்றது. தம்மிக்கவின் பானத்தை மக்களுக்கு பரிந்துரைத்தது. மண் குடத்தை ஆற்றில் உடைத் தது. இவ்வாறான வேலைகளையே அரசு செய்தது. தம்மிக்கவின் பாணி கொரோனாவைக் கட்டுப்ப டுத்தாது என்பது இப்போது நிரூபணமாகியுள்ளது. அந்த மருந்தை நாட்டு மக்களுக்கு பிரபல்யமடை யச் செய்து பரிந்துரைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

கொரோனா கட்டுப்பாட்டு செயற்பாட்டுக்கு பலர் நிய மிக்கப்பட்டனர். ஆனால் தற்போதுள்ள மோசமான நிலைமைக்கு யாரும் பொறுப்பேற்கத் தயாரில்லை. தற்போது வெளியிடப்படுகின்ற தொற்றாளர்கள் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புக்கள் தொடர்பான எண்ணிக்கைகள் நம்பிக்கைக்குரியவை அல்ல. - என்றார். (ஒ-இ)

# 4,000 தொற்றாளர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தல்

கொழும்பு, மே 11

இலங்கையில் கொரோனாத் தொற்று தீவிரமடைந் துள்ள நிலையில், சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள னர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவமனைகளில் படுக்கைகளுக்குப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதால், தொற்றாளர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் புத்தாண்டுக் கொத்தணியுடன் தொற்றாளர் கள் நாளாந்தம் அதிகரித்து வரும் நிலையில், மருத் துவக் கண்காணிப்பிலிருந்து ஆயிரத்து 335 பேர் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ம-4)

# அதிகரிக்கும் உயிரிழப்புக்கள் ஜனாதிபதிக்கு பரிந்துரைகள்

கொழும்பு, மே 11

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்கள் நாளாந்தம் அதிகரித்து வரும் நிலையில், மருத்துவ அதிகாரிகள் இணைந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு 7 பரிந்துரைகள் அடங்கிய கடிதத்தை அனுப்பியுள்ளனர்.

கொவிட் நெருக்கடி நிலை குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ள இலங்கை மருத்துவ சங்கம், அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம், மருத்துவ நிபுணர்கள் சங்கம் மற்றும் எஸ்.எல்.எம்.ஏ. இன்டர்கொலேஜியேற் குழு ஆகியவை கூட்டாக இணைந்து இந்தக் கடி தத்தை அனுப்பியுள்ளன.

கடுமையான நகர்வுக் கட்டுப்பாடுகள், சோத னைகளை விரிவுபடுத்தல், அறிகுறியற்ற நோயாளிகளை வீட்டில் தனிமைப்படுத்தல் மற்றும் மேலதிக உபகரணங்கள் உள்ளிட்ட கோரிக்கைகளை விரைவில் நடைமுறைப்ப டுத்துமாறு மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ள னர். (ம-4)

# உயிரிழப்பை மறைத்து மக்களை ஏமாற்றாதீர்

## ஜே.வி.பி. வலியுறுத்து

கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பாக பொய்யான புள்ளிவிபரங்களை வெளி யிடுவதன் மூலமும், பி.சி.ஆர். பரிசோதனைகளைக் குறைப்பதன் மூலம் மக்களை ஏமாற்ற வேண்டாம். அவர்களது உயிர்களுடன் விளையாட வேண்டாம் இவ்வாறு ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் நளின் ஜயதிஸ தெரிவிக்கையில்:

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் விவரங்களை மாத்திரம் வெளியிடுகின்றோம். எனினும் வைரஸ் தீவிரமடைந்து ஏனைய நோய்களால் உயிரிழந்த வர்களின் விவரங்களை வெளியிடுவதில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித் துள்ளார்.

இதன் மூலம் விவரங்கள் மறைக்கப்படுகின்றன. எனவே உண்மையான விவரங்களை வெளியிட வேண்டும் என்று அரசை வலியுறுத்துகின்றோம். - என்றார். (ம-4)



# உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதியுடன் சஜித் சந்திப்பு

உலக சுகாதார ஸ்தாப னத்தின் இலங்கைக் கான பதில் பிரதிநிதி மருத்துவர் ஒலிவியா நிவேராஸ் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோ ருக்கிடையில் கடந்த சனிக்கிழமை முக்கிய சந்திப்பு நடைபெற்றது. கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலு வலகத்தில் இந்தச் சந் திப்பு இடம்பெற்றது.

உலகம் எதிர்கொண் டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நிலை மற்றும் இலங்கையின் சவால்கள் தொடர்பாக இங்கு கலந்துரையா டப்பட்டன என்று எதிர்க் கட்சித் தலைவரின் ஊட கப் பிரிவு தெரிவித்துள் ளது.

கொரோனா நெருக்க டியைச் சமாளிப்பதற் குத் தேவையான ஒத் துழைப்புகளை வழங் குமாறு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பதில் பிரதிநிதியிடம் சஜித் பிரே மதாஸ இதன்போது வேண்டுகோள் விடுத் துள்ளார்.

கொரோனா பரவல் மற் றும் உயிரிழப்புகளைத் தடுப்பதற்குத் தேவை யான அனைத்து வகை யான ஒத்துழைப்புக ளையும் வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியன தயாராக இருக்கின்றன என்று ஒலிவியா நிவேராஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் விசேட மருத்துவ நிபுணர் களான பேராசிரியர் நாலிகா குணவர்தன, மருத்துவர் பாலித அபே கோன் மற்றும் மருத்து வர் பத்மலால் டி சில்வா ஆகியோரும் இந்தச் சந் திப்பில் கலந்துகொண் டனர். (த-22)

# எல்லைக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துங்கள்

## அரசிடம் கோரிக்கை

கொழும்பு, மே 11

எல்லைக் கட்டுப்பாட்டை நடைமு றைப்படுத்துவதுடன் நுழைவிடங் களில் பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கையை அதிகரித்து நாட்டு மக்களைப் பாதுகாக்குமாறு அரசிடம் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் ஜனநாயகத்துக் கான மக்கள் இயக்கம், மக்க ளின் கையெழுத்துடன் அரசுக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கை மனுவிலேயே மேற்படி விடயம் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது,

தற்போது தீவிரமடைந்துள்ள வைரஸ் பரவலைக் கட்டுப்படுத் துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகள் உடனடியாக ஆரம்பிக் கப்படவேண்டும்.

இல்லாவிடின் சுகாதார முறைமை யில் அதிக சுமையை ஏற்படுத்தி சுகாதாரப் பணியாளர்களுக்கு அதிகரித்த அபாய நிலையையும், இறப்புக்களில் அதிகரிப்பையும் ஏற்படுத்தும்.

தற்போதுள்ள சூழலை கையாள் வதற்கான தன்முனைப்பான நட வடிக்கைகள் இல்லை. இதனால் மக்களின் சுகாதாரம் மற்றும் நலோன்புகையை ஆபத்துக்குள் ளாகும்.

பொருளாதாரத்துக்கும் வாழ்வா தாரத்துக்கும் சேதத்தை இது ஏற் படுத்தும்.

தற்போதைய சூழலில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கத் தவறினால் இலங்கையர்களின் உயிர்க ளையே விலையாகக் கொடுக்க வேண்டிவரும், -என்றுள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்தோம்!

## இராணுவத்தளபதி தெரிவிப்பு



**கொழும்பு, மே 11**

**கொரோனா அறிகுறி தென்படாத தொற்றாளர்களை வீடுகளில் வைத்துப் பராமரிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று இராணுவத் தளபதி மறுத்துள்ளார்.**

'எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி வீடுகளில் இருப்போருக்கு வீடுகளிலேயே சிகிச்சை வழங்க வேண்டி ஏற்படும். இதற்கு தேவையான வழிகாட்டி ஆலோசனை தற்போது தயாரிக்கப்படுகிறது' என்று இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே கடந்த 7ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே இராணுவத் தளபதி அதனை மறுத்துள்ளார். மேலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 7 மருத்துவ அமைப்புக்கள் இணைந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நாட்டை முடக்குவது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைக் குறிப்பிட்டு கடந்த 6ஆம் திகதி கடிதம் அனுப்பியிருந்தன. அவ்வாறான கடிதம் இன்னமும் தனது கைகளுக்கு கிடைக்கவில்லை என்று இராணுவத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ஒ.5)



## இந்தியப் பயணிகளுக்கான தடை இரண்டு வாரங்களில் மீளாய்வு!!!

கொழும்பு, மே 11

இந்தியப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு கடந்த 6ஆம் திகதி விதிக்கப்பட்ட தடை தொடர்பில் இரு வாரங்களில் மீளாய்வு செய்யப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைப் பயணிகளை அழைத்து வருவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனாத் தாக்கத்தால் இலங்கை மட்டுமல்ல உலகின் பல்வேறு நாடுகளதும் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை ஊடான வருமானத்தை மாத்திரமே நம்பியிருந்தவர்கள் தொடர்பில் இலங்கை அரசு கரிசனையுடன்தான் இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

## பல்கலைக்கழக மாணவன் கைது

கொழும்பு, மே 11

பல்கலைக்கழக மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில், பல்கலைக்கழக மாணவன் ஒருவர் ஏறாவூர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பப் பிரிவில் கல்வி கற்றுவரும் மாணவியை, ஆண்கள் விடுதிக்கும் பெண்கள் விடுதிக்கும் இடைப்பகுதியில் வைத்து குறித்த மாணவன் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து மாணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மாணவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மாணவன் விடுதியில் தங்கிருந்து வர்த்தகப்பிரிவில் கல்வி கற்றுவருபவர். அவர் அம்பாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

## 30 பேர் கைது

பதுளை, மே 11

முகக்கவசம் அணியாமை மற்றும் சுகாதார நடைமுறைகளை மீறியமை ஆகியவை உள்ளிட்ட குற்றச்சாட் டுக்களுடன் 30க்கும் மேற்பட்டோர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

பண்டாரவளை நகரப் பகுதியில் இடம்பெற்ற விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதன் காரணமாக பொலிஸார் இந்த விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர். (ம-4)

## அறிகுறிகள் அற்றவர்களுக்கு அவர்களது வீட்டிலேயே சிகிச்சை

கொழும்பு, மே 11

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் எதுவும் அற்ற நிலையில், தொற்று உறுதிப்படுத்தப்பட்டோரை அவர்களது வீட்டில் தங்கவைத்து, சிகிச்சை அளிப்பதற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நோயாளிகள் வீடுகளில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர். குறிப்பாக கடுமையான அறிகுறிகள் இல்லாத நோயாளிகள் இவ்வாறு தங்கியுள்ளனர்.

அவர்களுக்கு மருத்துவமனைகளில் வசதிகளை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.


அத்துடன் நோயாளிகளின் பராமரிப்பு தொடர்பில் முறையான திட்டத்தையும் செயற்படுத்தவுள்ளோம். அதேவேளை கர்ப்பிணிகளுக்குப் பொருத்தமான தடுப்பூசி தொடர்பிலும் பரிசீலித்து வருகின்றோம்- என்றார். (ம-4)

## போதைப்பொருளுக்கு அடிமையானவர்களே 40 வீத குற்றச்செயல்களின் சூத்திரதாரிகள்

கொழும்பு, மே 11

இலங்கையில் நடைபெறும் 40 சதவீதமான குற்றச் செயல்கள் போதைப்பொருள் பாவனையாளர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. சிறைச்சாலைகளில் இருக்கும் போதே பெருமளவானோர் போதைப்பொருள் பாவனையாளர்களாக மாறுகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதற்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவும் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படும் போது அவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் திட்டமும் உள்ளது எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை தேசிய அபாயகர போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அண்மைய தகவலின் அடிப்படையில் இலங்கையில் 45 ஆயிரம் பேர் ஹெரோய்னையும், 6 லட்சம் பேர் கஞ்சாவையும் தினமும் பயன்படுத்துகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)



## சுகாதாரம் மீறல்: 7,316 பேர் கைது

கொழும்பு,மே 11

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட சுகாதார நடைமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 7 ஆயிரத்து 316 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றை அடுத்து, கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன.

அவற்றில் முக்கியமாக முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களைக் கண்காணிப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகளையும் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம4)

## உருக்குலைந்த சடலம் மீட்பு

மட்டக்களப்பு, மே 11

வாழைச்சேனை காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய வேலாட்சி சாமித்தம்பி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த மாதம் 27ஆம் திகதி வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் வெளியேறியுள்ளார்.

அவர் வீடு திரும்பாத நிலையில் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டார். (ம-4)

## கிழக்கு கடலில் புதிய பவளப்பாறை

கொழும்பு, மே 11

இலங்கையின் கிழக்கு மாகாணக் கடலில் சேதப்படுத்தப்படாத புதிய பவளப் பாறை ஒன்று கடந்த 7ஆம் திகதி கண்டறியப்பட்டுள்ளது என்று இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது. கடலின் மேல் மட்டத்திலிருந்து 5 தொடக்கம் 15 அடி ஆழத்தில் 500 சதுர மீற்றரில் இந்த பவளப்பாறை காணப்படுகின்றது. அது நல்ல நிலையில் காணப்படுகின்றது என்று கடற்படை குறிப்பிட்டுள்ளது. (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முடக்கம் அவசியம்!

இலங்கையில் கொரோனாப் பெருந்தொற்று நாளுக்கு நாள் தீவிரமாகிவரும் நிலையில், இந்தத் தீவு மிகப்பெரும் மரண ஓலத்தைச் சந்திக்கப்போகின்றது என்று எச்சரித்துள்ளது அமெரிக்க ஆய்வொன்று. அமெரிக்க பல்கலைக்கழகத்தின் மேற்படி ஆய்வில், ஜூன் மாதத்தின் பின்னர் நாளொன்றுக்கு சராசரியாக 250 பேர் இலங்கையில் கொரோனாப் பெருந் தொற்றால் இறப்பார்கள் என்றும், செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனாவால் உயிரிழப்பார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஒரு முனையில் கொரோனாப் பெருந்தொற்று கட்டுக்கடங்காமல் பரவிவரும் நிலையில், மறு முனையில் இந்தப் பேரலையைக் கட்டுப்படுத்துவதற்குரிய காத்திரமான செயற்பாடுகள் எவையும் அரசால் முன்னெடுக்கப்படவில்லை. இத்தகையதொரு பின்னணியில் மேற்படி ஆய்வறிக்கையை புறந்தள்ளிவிட முடியாது. அத்தகையதொரு பேராபத்து - மரண ஓலம் பேரவலம் எமக்கருகில் உள்ளது என்பது வெள்ளிடைமலைதான்.

அரசுக்குள் இருக்கும் சில வித்துவான்கள், 'இந்தியா, பிரேசில், அமெரிக்கா போன்ற நாடுகளில் இலங்கையை விடவும் பின்னடைவான - பேராபத்தான நிலை ஏற்பட்டுள்ளது. மேற்படி நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை எவ்வளவோ பரவாயில்லை' என்று தம்மை நியாயப்படுத்தவே செய்கின்றனர். ஆனால், மேற்படி நாடுகளின் பொருளாதாரப் பலம் இலங்கைக்கு உள்ளதா என்று கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அமெரிக்காவிடமும் பிரேசிலிடமும் பணபலம் உள்ளது. இந்தியா கொவிட் தடுப்பூசி தயாரிப்புப் பணியில் முக்கிய முனையாக உள்ளது. ஆனால் இலங்கை?. ஏற்றிய தடுப்பூசியின் இரண்டாவது டோஸுக்குப் பட்டபாடு யாவரும் அறிந்ததே.

ஆக, இந்தப் பெருந்தொற்றை மேலும் ஆள வேரூன்றாமல் இருக்கச் செய்வதுதான் இலங்கையின் வெற்றி. சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் கட்டுப்பாடுகள், பயணத் தடைகள் விதிக்கப்படா விட்டால் ஒரு பேரலை ஏற்படும். அந்தப் பேரலை மிக மிக ஆபத்தானதாகவும் பாரதூரமானதாகவும் அமையும் என்று எச்சரிக்கப்பட்டபோதிலும் அரசு எவ்வித இறுக்கப்போக்கையும் கைக்கொள்ளவில்லை. பொருளாதாரத்தை இலக்காகக்கொண்டு மக்களை அவர்கள் போக்கிலேயே விட்டிருந்தது. இதன் விளைவாக நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ளம் ஏற்கனவே எம்மைச் சூழ்ந்துவிட்டது. எனினும் அதிலிருந்து எதிர்நீச்சலடித்து வெற்றிகொள்ளக் கூடிய ஏதுநிலைகள் இருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. ஒரு குறுகிய பொதுமுடக்கத்தையாவது அரசு அறிவிக்க வேண்டும். தொற்றுக்கள் மேலும் விரவாமல் பரவாமல் இருக்க இந்த முடக்கம் நிச்சயம் கைகொடுக்கும். எதிர்க்கட்சியினரும் சுகாதாரத்துறையினரும் தற்சமயத்தில் பொதுமுடக்கம் ஒன்றுக்குச் செல்லவேண்டியதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்திவரும் நிலையில் அரசு செவியிழந்து நிற்பது ஏன் என்பது புரியவேயில்லை.

இந்தப் பேராபத்து நிலைக்குள்ளும் முடக்கம்பற்றி சிந்திக்காமல் தன்நிலை மாறாமல் நாட்டை தன் இஷ்டம்போல் திறந்து வைத்திருந்தால் ஜூன்மாதம் இன்னும் மோசமான காட்சிகள் அரங்கேறும். அவை மேற்குறிப்பிட்ட அமெரிக்க ஆய்வின்படியோ அல்லது அதைவிடப் பாரதூரமானதாகவோ அமையலாம்.




# விவசாய உற்பத்திப் பொருள்கள் குறைந்தவிலையில் கொள்வனவு

## உழவர் சந்தை வேண்டும் என்று கிளி. விவசாயிகள் கோரிக்கை

**கிளிநொச்சி, மே 11**

**கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட ஸ்கந்தபுரம் மற்றும் கிளிநொச்சி பொதுச்சந்தைகளில் சந்தைப்படுத்துவதற்காக உற்பத்தியாளர்களால் கொண்டுவரப்படும் மரக்கறிவகைகள் மிகவும் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டு நுகர்வோருக்கு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில்;

உள்ளூர் விவசாய உற்பத்திகளான பூசணிக்காய் மற்றும் பயற்றங்காய் என்பவை ஸ்கந்தபுரம் மற்றும் கிளிநொச்சி பொதுச்சந்தையில் கிலோ ஒன்று இருபது ரூபா தொடக்கம் இருபத்தைந்து ரூபா வரை எம்மிடம் கொள்வனவு செய்யப்படுகின்றன. ஆயினும் வியாபாரிகளால் நுகர்வோருக்கு கிலோ ஒன்றுக்கு 80 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன. இது அதிகூடிய விற்பனை விலையாகும். நியாயமான விலையெனில் ஒரு கிலோ கொள்வனவு செய்யும் நுகர்வோர், இரண்டு கிலோவரை கொள்வனவு செய்யமுடியும். இவ்வாறு ஒரு பகுதியினர் அதிக இலாமிட்டுவதால் நாம் தொடர்ந்தும் நட்டத்தையே எதிர்நோக்குகிறோம்.

எங்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு நாங்களே விலையைத் தீர்மானிக்கும் வகையில் உழவர் சந்தைகளை கிளிநொச்சி பிரதேத்தில் அமைத்துத் தந்தால் எமக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யமுடியும். இதனால் உற்பத்தியாளர்களான நாம் நுகர்வோரிடம் அதிக இலாபத்தை எதிர்பார்க்காது திருப்திகரமான விற்பனையை மேற்கொள்ள முடியும். உழவர் சந்தையை ஏற்படுத்தித் தருமாறு கரைச்சி பிரதேச சபையிடம் பலமுறை கோரிக்கை வைத்தும் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை - என்றனர்.

இந் நிலையில் உழவர் சந்தை அமைப்பது தொடர்பில் கரைச்சி பிரதேச சபை ஆளும் கட்சியின் ஸ்கந்தபுரம் வட்டாரத்தின் பிரதேச சபை உறுப்பினர் தயாபரனை தொடர்பு கொண்டு கேட்டபோது, உழவர்சந்தை அமைப்பது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையில் தீர்மானம் நிறுவேற்றப்பட்டுள்ளது. ஆயினும் இன்னும் நடைமுறைப்படுத்தப் படவில்லை - என்றார்.

(ப-12)

# மணல் அகழ்வை கட்டுப்படுத்த பொலிஸ் சோதனைச் சாவடிகள்

துணுக்காய், மே 11

துணுக்காய் பிரதேசத்தின் புத்துவெட்டுவான் கிராமத்தில் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இரு பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மணல் அகழ்வில் ஈடுபட்டுவருவோர் பிரதானமாக பயன்படுத்தும் வீதியில் ஐயன்குளம் பொலிஸாரால் இரு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த சிலகாலங்களாக துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட பழையமுறிகண்டி, ஐயன் குளம் மற்றும் புத்துவெட்டுவான் குளம் ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் மரக்கடத்தல்கள் ஆகியவை இடம்பெற்றுவந்தன.

இந்த நிலையில் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கும்படி கிராமத்தின் பொதுஅமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தன. இதனை யடுத்து பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஐ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகர சட்டவரைவு அடுத்த வாரம் நிறைவேறும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் உறுதி

கொழும்பு, மே 11

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு எதிர் வரும் 18ஆம் அல்லது 19 ஆம் திகதிகளில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**



சர்வதேச வர்த்தக சபை ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர் நீதிமன்றம் பரிந்துரைக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு அரசு இந்தச் சட்ட வரைவில் மாற்றங்களை மேற்கொள்ளும். போர்ட் சிட்டி தொடர்பான ஆரம்பப் பணிகள் 2013 ஆம் ஆண்டு தொடங்கியபோது, முன்னாள் பிரதமரும் கடந்த அரசும் இந்தத் திட்டத்தை தொடர்ந்தன. எனவே இந்தத் திட்டம் இலங்கையின் பொருளாதாரத்தின் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்பதால், எதிர்க்கட்சியினர் எமக்கு ஆதரவளிப்பர். இந்தத் திட்டம் 80 மில்லியன் டொலர் மேலதிகமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டுவரும். ஒரு லட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும்- என்றார். (ம-4)

## பி.சி.ஆர். முடிவுகள் தாமதிப்பதால் தொற்றாளர் எண்ணிக்கை அதிகம்

### சுகாதார அதிகாரி தகவல்

கொழும்பு, மே 11



பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தாமதிப்பதால், நாட்டில் ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான கொரோனாத் தொற்றாளர்கள் அறிவிக்கப்படுகின்றனர் என்று சுகாதார அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது அதிக எண்ணிக்கையிலான பி.சி.ஆர்.ப ரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகி ன்றன. இதனால் கடந்த சில நாள்களாக பி.சி.ஆர். முடிவு அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு சுமார் 15 ஆயிரம் பி.சி.ஆர். மாதிரிகள் சோதனை செய்யப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் இது ஒரு நாளைக்கு 20 ஆயிரமாகவும் அதிகரிக்கப்படுகின்றது. அதனால் ஒரே நாளில் அதிக தொற்றாளர்கள் அறிவிக்கப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## சட்டவிரோத கைதுகள்; முறைப்பாடுகள் அதிகம்

### மனித உரிமைகள் ஆணைக்குழு தகவல்

கொழும்பு, மே 11

நாட்டில் சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்படுகின்றமை மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக முறைப்பாடுகள் என்பவை அதிகரித்துள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு, ஆணைக்குழு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

நாட்டில் நிலவும் கொவிட் 19 நிலைமையில், அவ்வாறான உரிமை மீறல்கள் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கைதுசெய்யப்படும் அனைத்து சந்தேகநபர்கள் தொடர்பிலும் சட்ட வரையறைக்குட்பட்டு செயற்பட அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்க வேண்டும் என்று ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளது.

கொரோனா பரவல் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதன் ஊடாக, தடுப்புக் காவலின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள், தமது உறவினர்கள் மற்றும் சட்டத்தரணிகளைச் சந்திப்பதற்கு, தற்காலிகமாக சந்தர்ப்பம் வழங்கப்படாமை காரணமாக அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன என்று பல்வேறு தரப்பினர் தமக்கு முறைப்பாடு அளித்துள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எனவே இது தொடர்பில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அறிவிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது. (ம-4)

## விமான நிலையங்களை மூடத் தீர்மானமில்லை

கொழும்பு, மே 11


விமான நிலையங்களை மூடுவதற்கு, இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. கொவிட் குழுவின் முடிவுக்கு ஏற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளபோதும், சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்களின்படி இலங்கைத் தொழிலாளர்களைத் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தற்போதைய சூழ்நிலையில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பது குறித்து விமான நிலைய ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## ஹற்றன் ஆடைத்தொழிற்சாலையில் 9 பேருக்குக் கொரோனாத் தொற்று

ஹற்றன், மே 11



ஹற்றன், நோர்வூட் பகுதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் 100 ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் 9 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையின் ஊழியர்கள் சிலருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்ட காரணத்தால் மேற்கொள்ளப்பட்ட உடனடி அன்டிஜென் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஆடைத்தொழிற்சாலையின் ஊழியர்கள் உட்பட 280 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ச)

## கொரோனாவை கட்டுப்படுத்த அதிகாரிகளின் ஆதரவில்லை

### சுகாதாரப் பரிசோதகர்கள் போராட்டம்

கொழும்பு,மே 11

கொரோனாத் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஊவா மற்றும் பதுளை மாவட்ட சுகாதார அதிகாரிகள் முறையான ஆதரவு வழங்குவதில்லை என்று தெரிவித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் திஸாநாயக்க தெரிவிக்கையில்;

'கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் நாளாந்த கடமை என்ன என்பது தொடர்பாக உரிய தெளிவுபடுத்தலொன்றை எதிர்பார்க்கின்றோம். அச்சுறுத்தலான சூழ்நிலையில் மக்களுக்கு ஆரோக்கியமான சேவையை வழங்க வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது' - என்றார். (ம-4)

## ஆய்வகங்களை மேம்படுத்துங்கள்

### அரசிடம் அவசர கோரிக்கை

கொழும்பு, மே 11

இலங்கையிலுள்ள மருத்துவ ஆய்வுகூடங்கள் அவை தங்களுக்குரிய அளவிலும் அதிகூடிய சேவைகளை வழங்கி வருகின்றன. ஆய்வகங்களுக்கு பொருத்தமான உபகரணங்களை வழங்கி அவற்றை மேம்படுத்த வேண்டும். இவ்வாறு இலங்கை மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

'ஆதார மருத்துவமனை மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள ஆய்வுகூடங்களுக்கு பொருத்தமான உபகரணங்களை வழங்குவதன் மூலம் அவற்றை மேம்படுத்த வேண்டும். இது தற்போதைய சேவைத் திறனை இரட்டிப்பாக்க உதவும் என்று குறிப்பிட்டார்.

நாட்டின் பெரும்பாலான ஆய்வுகூடங்களின் திறன் மோசமான நிலைமைக்குச் சென்றுள்ளது. ஒரு சில ஆய்வுகூடங்களே திருப்தியான வகையில் செயற்படுகின்றன என்றும் ரவி குமுதேஸ் சுட்டிக் காட்டினார்.

'அரசால் 24 ஆய்வுகூடங்களே இயக்கப்படுகின்றன. இவற்றில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் 40 தொழில்நுட்ப அறிக்கைகளை ஜனாதிபதி முதல் கொண்டு சகல சுகாதார அதிகாரிகளிடமும் கையளித்துள்ளோம். ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை' என்று கவலை வெளியிட்டார் ரவி குமுதேஸ்.

நாட்டின் தற்போதைய இடர் நிலைமையைக் கையாளக் கூடிய வகையில் ஆய்வுகூட வசதிகள் இல்லை என்றும் இதற்குரிய மாற்றுவழி ஆராயப்படவேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (ஓ.5)

## கல்வி அமைச்சின் பிரிவுகள் முடக்கம்

கொழும்பு, மே 11

கல்வியமைச்சின் பாடசாலை நடவடிக்கைகள் பிரிவு உள்ளிட்ட ஆறு பிரிவுகள் மூடப்பட்டுள்ளன. அங்கு கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமையால், ஆறு பிரிவுகளும் மூடப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் கல்வியமைச்சின் செயற்பாடுகளை, கொரோனாப் பரவலுக்கு மத்தியிலும் ஆகக் கூடுதலாக செயற்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறு கல்வியமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். அதனடிப்படையில் விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. முடக்கப்பட்ட பிரிவுகளின் செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல்கைதிகளை விடுவிக்கவும் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்!

## பெற்றோர் உருக்கமாகக் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 11**

**கல்முனை விவகாரத்தைப் போல அரசியல் கைதிகள் விடயத்திலும் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டு, அவர்களின் விடுதலைக்கு உதவவேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பாக கடந்த வாரம் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் ஒன்றிணைந்து அமைச்சர் சமல் ராஜபக்சவுடன் பேச்சு நடத்தியுள்ளனர். அதன் பிந்திய பெறுபேறுகளுக்கு அப்பால் இது ஒரு ஆரோக்கியமான அவசியமான ஒருங்கிணைந்த முன்னெடுப்பாகும். இதேபோன்று தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் 40 பேரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் 27 பேரும் நாட்டில் உள்ள மேலும் பல்வேறு சிறைகளில் 12 பேரும் என மொத்தம் 79 தமிழ் அரசியல் கைதிகள் சிறைத்தடுப்பில் உள்ளார்கள். அவர்கள் மத்தியில் வயோதிபர்கள், போரால் அவயங்கள் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறுவர்களாக கைது செய்யப்பட்டவர்கள் என பல வகையினரும் அடங்குவர். 10 முதற்கொண்டு 25 வருட காலமாக தொடர் சிறைத்தடுப்பை அனுபவித்துக்கொண்டிருக்கும் எம் பிள்ளைகள் நிச்சயமற்றதொரு வாழ்க்கைச் சூழலை எதிர்கொள்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடன் இருந்த பல அரசியல் கைதிகள் நோய் நொடிகளாலும், சிறைக் கலவரங்களாலும் சிறைக்குள்ளேயே செத்து மடிந்து போயுள்ளனர். எம் பிள்ளைகள் இன்று வருவார்கள், நாளை வருவார்கள் என எதிர்பார்த்து காத்திருந்த 20க்கும் மேற்பட்ட பெற்றோர் கடைசிவரை தங்கள் அன்புக்குரியவர்களின் முகத்தைக்கூடப் பார்க்க முடியாமல் இறுதி மூச்சைத் துறக்க நேரிட்டுள்ளது. போதுமான மருத்துவ வசதிகளோ ஊட்டச்சத்துள்ள போசனமோ இன்றி வரையறுக்கப்பட்ட குறுகியதொரு இடப்பரப்புக்குள் அரசியல் கைதிகளாக அவர்கள் இத்தனை ஆண்டுகளாக நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்டு 90 வீதமானவர்கள் மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளார்கள்.

சிறைகளில் ஏற்பட்ட இட நெருக்கடியைக் குறைக்கும் முகமாக அரசால் இரு வேறு தடவைகளில் ஆயிரக்கணக்கான கைதிகள் விசேட ஏற்பாட்டுக்களின் ஊடாக விடுவிக்கப்பட்டனர். எனினும் தமிழ் அரசியல் கைதிகள் எவருக்கும் அதில் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. எனவே இந்தத் தருணத்திலாவது ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி எதிர் அணிகளாக இருந்தாலும் சரி கட்சி, கொள்கை மாறுபாடுகளைக் கடந்து அரசியல் கைதிகள் தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும். நாளாந்தம் சிறைகளுக்குள் சிதைந்து கொண்டிருக்கும் எமது பிள்ளைகளின் விடுதலைக்காக அனைத்து தமிழ்க் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளும் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் ஒரு பொதுப் பொறிமுறையை முன்வைத்து மனிதாபிமான அடிப்படையில் பேச்சில் ஈடுபட வேண்டும் என்றுள்ளது. (ப-20)

## ப.நோ.கூ. சங்கத்தின் நிர்வாக சபை தெரிவு

மன்னார், மே 11

நானாட்டான் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது முன்னர் தலைவராக இருந்த சூரியகட்டைக்காடு கிளையைச் சேர்ந்த மரியாம்பிள்ளை சாந்த குணசிங்கம் மீண்டும் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

தொடர்ந்து முருங்கன் கிளையைச் சேர்ந்த அன்ரன் அன்றுராஜன் உபதலைவராகவும், புதுவெளி கிளையைச் சேர்ந்த ஜனாப் அஸ்ரப் அஸ்பாத், ஆத்திக்குளி கிளையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை தேவராசா, கற்கிடந்தகுளம் கிளையைச் சேர்ந்த அ.செபஸ்தியாம்பிள்ளை கோமஸ், நறுவிலிக்குளம் கிளையைச் சேர்ந்த ச.செபநேசன் வங்காலை கிளையைச் சேர்ந்த அலைக்ஸ் யூட் பிளாஸ்டர் பெனாண்டோ ஆகியோர் இயக்குநர் சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ)



கிளிநொச்சி பொது மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி கிளையின் உறுப்பினர்கள் 25 பேர் நேற்றுமுன்தினம் குருதிக்கொடை வழங்கினர். (ச-12)

## மன். மருத்துவமனையில் குருதிக்குத் தட்டுப்பாடு!

### கொடையாளர்களுக்கு அழைப்பு

மன்னார், மே 11



மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், குருதிக் கொடையாளர்கள் உடனடியாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் குருதி வங்கியுடன் தொடர்புகொள்ளுமாறு மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் செந்தூர் பதிராஜா அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

குருதி வழங்க விரும்புபவர்கள் உடனடியாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் இரத்த வங்கியுடன் அல்லது 0232222261 மற்றும் 0232222349 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி குருதிக்கொடையில் ஈடுபட முடியும் என மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் செந்தூர் பதிராஜா தெரிவித்துள்ளார். (ரு-56)

## நயினாதீவு நாகபூசணிக்கு பக்தர்கள் செல்லத் தடை

யாழ்ப்பாணம், மே 11

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கு பக்தர்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் பணிப்புரைக்கு அமைய ஆலய வளாகத்தினுள் ஆலய அறங்காவலர்கள், குருமார்கள் மற்றும் ஆலய பணியாளர்கள் ஆகியோர் தவிர்ந்த ஏனையோர் பிரவேசிக்க தற்காலிகமாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் ஆலயத்தில் இடம்பெற்று வந்த அபிஷேகங்கள் மற்றும் தினசரி அன்னதானம் போன்றவையும் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ.இ)

## காக்கைதீவு மக்களின் போராட்டத்துக்கு தடை

யாழ்ப்பாணம், மே 11

தாம் நாளந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகோரி, யாழ்ப்பாணம் காக்கைதீவு புதிய வீட்டுக் குடியிருப்பு மக்கள், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முன்பாக போராட முற்பட்டபோது, பொலிஸார் அதனைத் தடுத்து நிறுத்தினர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. கொரோனாத் தொற்று காரணமாக மக்கள் ஒன்றுகூட பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதனையடுத்து மக்கள் சார்பில் மனு கையளிப்பதற்கு இருவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந் நிலையில் இருவர் அம் மக்கள் சார்பில் பிரதேச செயலரிடம் தமது மனுவைக் கையளித்தனர்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை, பாதைகள் புனரமைப்பு, மழை காலங்களில் அந்தப் பகுதியில் வெள்ளம் தேங்குதல், சனசமூக நிலையம் ஒன்றை அமைத்தல் மற்றும் மயானத்தை வேறோர் இடத்தில் நிறுவுதல் ஆகியவை உள்ளிட்ட கோரிக்கைகளை அவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர். (ம-4,20)

## சந்தை வியாபாரிகள் அனைவரும் முகமறைப்பு கண்ணாடி அணியவும்

### சுகாதாரப் பகுதியினர் அறிவிப்பு

சாவகச்சேரி, மே 11

சாவகச்சேரி பொதுச் சந்தை வியாபாரிகள் அனைவரும் முகக் கவசத்துடன் முக மறைப்பு கண்ணாடியும் அணிய வேண்டும் என்று பொலிஸாரும் சுகாதாரப் பகுதியினரும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை சாவகச்சேரி பொதுச்சந்தையில் நடத்திய திடீர் பரிசோதனையின்போது வியாபாரிகள் அனைவரும் முகக்கவசம் அணிந்த நிலையில் காணப்பட்ட போதிலும், விற்பனை அலகினுள் பெருமளவு நுகர்வோர் காணப்பட்டதால் வியாபாரிகள் **அனைவரும் முகத்தை மூடி அணியும் கண்ணாடி அணிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.** (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன உர இறக்குமதி தடை மீளாய்வு செய்யப்படவில்லை

## அரசு திட்டவட்டமாக அறிவிப்பு



**கொழும்பு, மே 11**

**இரசாயன உரங்கள் இறக்குமதிக்கு தடைவிதிக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்திருந்த நிலையில், அது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என வெளியான தகவல்களில் உண்மையில்லை என்று அரசு அறிவித்துள்ளது.**

'ஜனாதிபதியின் அறிவிப்பு மீளாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள் அதை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆய்வு செய்யப்படுகின்றது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பெரும்போகத்தின்போது விவசாயிகளுக்கு எவ்வாறான மாற்றுவழிகளை மேற்கொள்வது என்பது தொடர்பில் ஆராய்கின்றோம்' என்று வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

'ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட இரசாயன உரங்களுடன் கப்பல்கள் சில இலங்கைக்கு வந்துள்ளன. ஆனால் ஜனாதிபதியின் அறிவிப்பில் மாற்றம் செய்யப்படவில்லை' என்று உரம் உற்பத்தி, வழங்கல் மற்றும் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி கொல்லி பயன்பாடு ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் மொகான் பிரியதர்சன டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 6ஆம் திகதி இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களம் ஓர் வர்த்தமானியை வெளியிட்டுள்ளது. அதில் சில இரசாயனங்களின் இறக்குமதிக்கு தடைவிலக்கு வழங்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

'இறக்குமதி தடை விலக்களிக்கப்பட்ட இரசாயனங்கள், உர உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கானது அல்ல. அவை ஏனைய உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கானது' என்று திறைசேரி செயலர் ஆட்டிகல குறிப்பிட்டார்.

பச்சை வீட்டு உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும் இரசாயன உரங்களுக்கு தடையிலிருந்து விதி விலக்கு வழங்குமாறு உரம் உற்பத்தி மற்றும் வழங்கல் மற்றும் இரசாயன உரங்கள் பூச்சி கொல்லி பயன்பாடு ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது எனவும் அறியமுடிகின்றது.

இதேவேளை, இலங்கையில் தடை விதிக்கப்படுவதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 16 ஆயிரம் மெட்ரிக் தொன் உரம் விரைவில் வந்தடையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இரசாயன உரத்துக்கு தடை விதிக்கும் அரசின் முடிவுக்கு எதிராக விவசாய அமைப்புக்கள் மற்றும் பெருந்தோட்ட உற்பத்தியாளர்கள் சங்கள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-ஒ.5)

# உரம், களை நாசினிகளுக்கு அதிக விலை: முல்லை. மாவட்டச் செயலர் தடுக்க வேண்டும்

## துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உரங்கள் மற்றும் களை, பூச்சி நாசினிகள் கூடுதல் விலையில் விற்பனை செய்யப்படுவதை தடுப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் சற்குணநாதன் சுயன்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் தனியார் வர்த்தக நிலையங்களில் 4 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் உரங்கள் விற்கப்படுகின்றன. களை, பூச்சி நாசினிகள் கடந்த காலங்களில் பொறிக்கப்பட்ட விலையில் இருந்து குறைத்தே வழங்கப்பட்டு வந்தன. தற்போது அதிக விலையில் விற்கப்படுவதால் விவசாயிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். வறுமையான விவசாயிகள் உரம், களை, பூச்சி நாசினிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பிரச்சினையாக உள்ள இந்த விடயத்துக்கு மாவட்டச் செயலாளர் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் தனியார் விற்பனை நிலையங்களுக்குச் சென்று அதிக விலையில் இவற்றை விற்காமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தேசிய ரீதியில் எந்தத் தடைகளும் ஏற்படாத போதும் எமது மாவட்டத்தில் மட்டும் திடீரென விலை அதிகரிப்புகள் ஏற்பட்டால் விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் - என்றார். (ப-13)

# கைக்குண்டு, மிதிவெடி முல்லையில் மீட்பு

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் கனரக இயந்திரம் மூலமாக காணியைத் துப்புரவு செய்யும் போது கைக்குண்டு மற்றும் மிதிவெடி என்பவை வெளிக்கிளம்பியுள்ளன.

அவற்றை அகற்றும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (த-19)

# ரிஷாத்தின் விடுதலைக்காக பெருநாளன்று வீடுகளில் கறுப்புக்கொடியை பறக்கவிடுக!

## அனைத்து முஸ்லிம் மக்களிடமும் முஸரப் முதுனபீன் எம்.பி கோரிக்கை

அம்பாறை, மே 11

ரிஷாத்தின் கைதைக் கண்டித்தும், எமது துக்கத்தை வெளிக்காட்டும் முகமாகவும் எதிர்வரும் பெருநாள் தினத்தன்று எமது வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்டு முஸ்லிம்கள் ஆகிய நாம் பிரதேச வாதங்கள் மற்றும் கட்சி பாகுபாடு இல்லாத சகோதரத்துவத்தை வலியுறுத்துவோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கிழக்கு மாகாண இளைஞர் அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி முஸரப் முதுனபீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ரிஷாத்தின் கைது தொடர்பில் வீணாக படம் காட்டுவோர் மத்தியில் உளத்தூய்மையோடு அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறேன். என்னுடன் இணைந்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி, எ.எல்.[illegible] எம்.பி உட்பட பலரும் [illegible] வருகிறோம். தலைவர் உட்பட அநியாயமாகக் கைது செய்யப்பட்டுள்ள முஸ்லிம் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே மனிதாபிமானமுள்ள எல்லா முஸ்லிம்களினதும் எதிர்பார்ப்பாக உள்ளது. பிரதமர், அமைச்சர்கள், ஆளும் தரப்பு எம்பிக்கள் மற்றும் அரச தரப்பு முக்கி யஸ்தர்கள் போன்றோரைச் சந்தித்து இந்த சமூகத்தின் தேவைகள் தொடர்பிலும் [illegible] பிரச்சினைகள் [illegible] சமூகத்தின் இக்கட்டான [illegible] நிலைகள் தொடர்பிலும் பேசி வருகிறோம் - என்றார். (ப)

# கொரோனாவை விரட்ட யாழ்ப்பாணத்தில் வழிபாடு

யாழ்ப்பாணம்,மே 11

உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் வண் வடமேற்கு ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் முதன்மைக் குரு சிவஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வரக் குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்கள் தோறும் கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# மண்சரிவு அபாயம்

இரத்தினபுரி, மே 11

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 9 பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பலாங்கொடை, எஹெலியகொட, இரத்தினபுரி, குருவிட்ட, எலபாத்த, கிரியெல்ல, வெலிகேபொல, இம்புல்பே மற்றும் ஒப்பநாயக்க ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ம-4)



# குரங்குகள் அட்டகாசம்; உடமைகள் பல நாசம்

மட்டக்களப்பு, மே 11

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் குரங்குகளின் அட்டாகாசம் அதிகரித்து காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வாழைச்சேனை ஹைறாத் வீதியில் நேற்றுமுன்தினம் வீடு ஒன்றினுள் நுழைந்த குரங்குகள், வீட்டுக் கூரையை சேதப்படுத்தியதுடன் அங்குள்ள பொருள்களையும் உடைத்து அட்டகாசம் புரிந்துள்ளன. இவை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற நிலையில் நாம் பெரிதும் பாதிக்கப்படுகிறோம். எமது சொத்துக்களும் சேதமாக்கப்படுகின்றன.

வாழைச்சேனை பிரதேசத்தில் தொடர்ச்சியாக குரங்குகளில் வருகை அதிகரித்து வருகின்றமையால் எமது பாதுகாப்பு கருதி உரிய அதிகாரிகள் நடவடிக்கை [illegible] வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண ஆளுநரின் கருத்தை கல்வியலாளர்கள் எதிர்க்க வேண்டும்!

## தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 11**

**வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் கடந்த சில நாள்களுக்கு முன்பு டெய்லி நியூஸ் எனும் ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கியிருந்த நேர்காணலில் வடக்கில் வாழ்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில்களை பெற்றுக்கொள்வதற்கான போதிய கல்வித்தகைமை இல்லை என்று கூறியிருப்பதானது மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதி செயலாளரும், வேலணை பிரதேச சபை உறுப்பினரும், சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் செயலாளருமான கருணாகரன் நாவலன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

இன ஒடுக்கல், பழிவாங்கல், திட்டமிட்ட வன்முறைகள், இடப்பெயர்வுகள், போர் பேரழிவு, நிச்சயமற்ற எதிர்காலம் என்று சொல்லில் அடங்காத துன்பங்களை எதிர்நோக்கியிருந்த போதிலும் வடக்கு மாகாண மாணவர்கள் கல்வியில் தொடர்ச்சியாக பல சாதனைகளைப் படைத்துள்ளனர். அண்மையில் வெளிவந்த ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளிலும் எமது மாணவச் செல்வங்களின் திறமைகளை அவதானிக்கமுடிந்தது. நீண்டகாலமாக கொழும்பிலேயே வாழ்ந்துவருபவர் திருமதி சாள்ஸ். வடமாகாண ஆளுநராக அவர் பதவியேற்ற பின்பும் அவரை வடக்கில் காண்பதென்பது அரிது. இவ்வாறான ஒருவர் வடக்கிலுள்ள இளம் சமுதாயத்தினர் பெரும் இடர்களின் மத்தியில் தமது திறமைகளை வெளிப்படுத்திருப்பது தொடர்பில் அறிய வாய்ப்பில்லை. வடக்கிலுள்ள அரச திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றிலுள்ள பதவிகளுக்கு அதிகளவான சிங்கள வர்களை நியமிக்கும் திட்டத்தை தற்போதைய அரசு முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது. அதன் ஓர் அங்கமாகவே அண்மையில் வடக்கு மாகாணசபைக்குரிய 17 பாடசாலைகளை தேசிய பாடசாலை எனும் பெயரால் மத்திய அரசு அபகரித்திருந்தது. இதன் ஆபத்தை உணராத பலர் மாகாணப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக ஆக்கப்படுவதை தூரநோக்கின்றி ஆதரிக்கின்றனர். தனது எஜமான்களின் உத்தரவுக்கிணங்க வடக்கில் சிங்கள ஆளணிகளை திணிக்கும் நோக்கிலேயே திருமதி சாள்ஸால் இவ்வாறான தவறான கருத்து முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு வடக்கின் இளைஞர்கள் மீது முன்வைக்கப்படுகின்ற விசமத்தன மான கருத்துக்களை கல்வியலாளர்கள் வன்மையாகக் கண்டிக்கவேண்டும்.

அத்தோடு இதே நேர்காணலில் காங்கேசன்துறை சீமந்து தொழிற்சாலையை மீளவும் அமைக்க வேண்டுமென்று வட மாகாண ஆளுநர் கூறியுள்ளார். ஓர் சூழலியல் செயற்பாட்டாளன் என்கின்ற வகையில் காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலை மீள உருவாக்கப்படவேண்டும் என்கின்ற கருத்தை நான் வன்மையாக எதிர்க்கின்றேன். மேற்படி காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையால் தமிழர்கள் அடைந்த நன்மைகளை விடவும் தீமைகளையே அதிகமாக எதிர்கொள்ள நேரிட்டது. மீளவும் மேற்படி சீமெந்துத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமானால் தோட்ட விவசாயத்துக்கு பெயர்போன வலிகாமம் வடக்குப் பகுதி மாத்திரமல்ல அதனை அண்டிய பிரதேசங்களும் பெரும் சூழல் மாசடைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்றுள்ளது. (ப)

# கூட்டமைப்பு எழுதிய கதையில் நடித்து வென்றாராம் ரணில்

## கூறுகிறார் அங்கஜன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் எழுதப்பட்ட கல்முனை வடக்கு பிரதேச செயலக தரம் உயர்வுக் கதையை, சாதகமாகப் பயன்படுத்திய ரணில் விக்கிரமசிங்க, நல்லாட்சியைத் தக்கவைக்கும் நாடகத்தை நடத்தியுள்ளார் என நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் குற்றஞ்சாட்டினார். கல்முனை விவகாரம் தொடர்பில் கடந்த புதன்கிழமை கொழும்பில் அமைச்சர் சமல் ராஜபக்சவைச் சந்தித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தித் தரவேண்டும் என அங்கு வாழ்கின்ற அனேகமான தமிழர்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுக்கின்றனர். நான் நல்லாட்சி அரசில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவின் தமிழ் பிரதிநிதியாக இருந்த காலகட்டத்தில் கல்முனை விவகாரம் தொடர்பில் நடத்திய போராட்டத்துக்கு நேரில் சென்றிருந்தேன். நல்லாட்சி அரசில் நாடாளுமன்றத்தை வழி நடத்துபவர்களாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசே காணப்பட்டது.

வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதும் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. நல்லாட்சி அரசில் ரணில் விக்ரமசிங்கவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் சேர்ந்து நடத்திய நாடகத்தில் கல்முனை உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதற்கான கணக்காளர் வெற்றிடத்தைக்கூட நல்லாட்சியில் தயார் செய்யவில்லை - என்றார். (ப-20)



கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில், பொருளாதாரத்தில் நலிவுற்ற தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தினரால் 1000 லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர் தாங்கிகள் வழங்கப்பட்டன. (ச-12)

# உரங்களுக்கு தட்டுப்பாடு; விவசாயிகள் பாதிப்பு

கிளிநொச்சி, மே 11

விவசாய உள்ளீடுகள் ஆன கிருமிநாசினி மற்றும் உர வகைகள் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதன் காரணமாக விவசாயத்தை மேற்கொண்டு வரும் விவசாயிகள் மற்றும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில்;

செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதி விவசாயிகள் வெண்டி, கத்தரி, போஞ்சி, பயிற்றை, தக்காளி, பாவல் மற்றும் மரவள்ளி போன்ற பயிர்களை பயிரிட்டு வருகின்றனர்.

கிருமிநாசினி மற்றும் உர வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதன் காரணமாக குறித்த பயிர்களுக்கு உரிய நேரத்தில் கிருமிநாசினி மற்றும் உரம் ஆகியவை விசிறப் படாத காரணத்தால் சிறந்த விளைச்சலைப் பெற முடியாது போயுள்ளது. அதுமட்டுமன்றி தற்பொழுது கொரோனா அச்சநிலையால் வெளி மாவட்டங்களுக்கு தமது மரக்கறி உற்பத்திகளை கொண்டுசெல்ல முடியாது திண்டாடுவதுடன், அவற்றை உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதி காரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஜ-113)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பவைத்து ஏமாற்றியுள்ளது

## வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியம் சாடல்

வவுனியா, மே 11

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் பதவியை ஒரு வருடத்துக்கு எமது அமைப்புக்குத் தருகிறோம் என்று நம்பவைத்து ஏமாற்றியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, அவ் ஒன்றியத்தின் நிர்வாகச் செயலாளர் சி. ஜனார்த்தனன் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;


கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரதேச சபைத் தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு மாத்திரம் மலையக மக்கள் சார்பாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் சார்பில் தனித்து சுயேட்சையாக நாங்கள் போட்டியிட்டிருந்தோம். இதன்மூலம் எமது மக்கள் இரண்டு பிரதிநிதிகளை எமது அமைப்புக்கு வழங்கியிருந்தனர். அந்த ஆசனங்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஊன்றுகோலாக இருந்தன. இது தொடர்பில் நாம் கூட்டமைப்புடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தோம். ஏனெனில் தமிழ் இனம், தமிழ்த் தேசியம் என்ற ரீதியில் எமது இளைஞர்களும் தேசியத்துக்காகப் போராடியிருக்கிறார்கள். பல போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளார்கள். அந்த வகையிலே தமிழ் தெற்கு பிரதேச சபையை பேரினவாதக் கட்சிகள் ஆட்சி அமைக்கக் கூடாது என்ற நோக்கிலேயே நாங்கள் இந்த ஆதரவைதமிழ்த்தேசியக்கூட்டமைக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியிருந்தேம். இந்த ஒப்பந்தத்தமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான தமிழ் அரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மற்றும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழகம் ஆகியவற்றின் சார்பிலே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் தவிசாளர் பதவியானது, முதல் மூன்று வருடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இறுதி ஒரு வருடம் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியத்துக்கும் வழங்கப்பட வேண்டும் என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுது மூன்று வருடங்கள் முடிவடைந்த பின்பும் இவ் ஒப்பந்தத்தை மீறி நான்காவது வருடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்களுக்குள்ளேயே தவிசாளரை நியமித்துள்ளது. இதன் மூலமாக இவர்கள் எங்களை ஏமாற்றியுள்ளனர். ஒரு பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்காக இவ்வாறு ஏமாற்று வேலையைச் செய்யும் கூட்டமைப்பு தேசியத்துக்காக எவ்வாறு அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுத்த போகிறது - என்றார். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகருடைய செயற்பாடுகள் பயங்கரவாதப் போர்வையில் பார்வை

## முதல்வர் மணிவண்ணன் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், மே 11**


**யாழ்ப்பாணம் மாநகர சபையின் சாதாரண செயற்பாடுகளைக்கூட பயங்கரவாதச் செயற்பாடுகளாக அரசு சித்தரிக்கின்றது. இதன் ஒரு அங்கமாகவே யாழ். மாநகர சபையின் தண்டம் அறவிடும் பணியாளர்கள் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாநகர சபையின் தண்டம் அறவிடும் பணியாளர்கள் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாநகர சபையின் செயற்பாடுகளை முடக்கும் வகையான செயற்பாடுகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. என்னை கைதுசெய்ததன் மூலம் சபையால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை முழுமையாக முடக்கிவிடலாம் என்றே அரசு நினைத்தது.

ஆனாலும் அரசின் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளை எதிர்த்து கட்சி பேதங்கள் இன்றி அனைத்துத் தரப்பினர்களும் ஒன்றுசேர்ந்து எதிர்ப்பை வெளிப்படுத்தியதன் காரணமாக அரசின் திட்டம் கைகூடவில்லை. இதன் தொடர்ச்சியாக இப்போது சபையின் தண்டம் அறவிடும் பணியாளர்கள் கொழும்பு 4ஆம் மாடிக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர். இந்த விசாரணை அழைப்பு என்பது தமிழ் மக்களுக்கு அரசு விடும் அச்சுறுத்தலாகவே பார்க்கப்பட வேண்டும். தமிழ் தாயகத்தின் நன்மைகளுக்காக முன்னின்று செயற்படுபவர்களையும், அவர்களுடன் இணைந்து பயணிப்பவர்களையும் இல்லாமல் செய்யும் நடவடிகையையே அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. விசாரணைக்கு அழைக்கப்பட்ட பணியாளர்களுக்கு வேண்டிய சட்ட உதவிகளை, மாநகர முதல்வராகவும், சட்டத்தரணியாகவும் நிச்சயம் செய்வேன் என்றார். (த-ப20)



## போரில் உயிரிழந்த சிறுமியின் நினைவாக உலருணவுப் பொதிகள்

முல்லைத்தீவு, மே 11

இறுதிப் போரின்போது உயிரிழந்த சிவரூபன் கம்சாயினி என்ற சிறுமியின் 12ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வும் உதவி வழங்கும் நிகழ்வும் முள்ளியவளையில் நடைபெற்றன.

சிறுமியின் குடும்பத்தினரின் உதவியில் ந.பார்த்தீபனின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் உயிரிழந்த சிறுமியின் படத்துக்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. அத்துடன் சிறுமியின் நினைவாக பொருளாதாரம் நலிவடைந்த நிலையில் கல்விகற்கும் பாடசாலை மாணவன் ஒருவருக்கு சைக்கிள் ஒன்றும் பொருளாதாரம் நலிவடைந்த குடும்பம் ஒன்றுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ச-19)

## யானைகளை விரட்டுவதற்கு யானை வெடிகளைத் தருக!

### முல்லை கிராமங்களின் மக்கள் கோரிக்கை

முல்லைத்தவு, மே 11

யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு யானை வெடிகளைப் பெற்றுத்தருமாறு துணுக்காய் பிரதேச செயலாளரிடம் முல்லைத்தீவின் அம்பலப்பெருமாள்குளம் மற்றும் கோட்டை கட்டியகுளம் ஆகிய கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த மக்கள் தெரிவிக்கையில்; கடந்த மூன்று மாதங்களில் இரு கிராமங்களிலும் 200க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன. தற்போது சிறுபோக நெற்செய்கைக்கு யானைகளுக்கு காவல் காக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ள நிலையில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்திடம் இருந்து யானை வெடிகளை விவசாயிகள் பெற்றுக் கொள்வதற்கு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை தென்னை அழிவுகளுக்கான இழப்பீடுகளைப் பெற்றுத்தருவதற்கும் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமங்களுக்குள் வரும் யானைகள் பயிர் அழிவுகளை ஏற்படுத்துவதுடன் குளங்களின் கட்டுமாணங்களுக்கும் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி தொடர்ச்சியாகக் கிராம அலுவலர்களிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த இரு வாரங்களாக அம்பலப்பெருமாள் குளத்தில் இருந்து அக்கராயன் செல்லும் வீதியில் யானைகளின் நடமாட்டம் மாலை 4 மணிக்குப் பின்னர் அதிகரித்துள்ளது எனவே பிரதேச செயலர் உடனடியாக யானை வெடிகளைப் பெற்றுத்தர வேண்டும்- என்றனர். (ப)



## விபத்தில் சிக்கியது சிறுத்தை; காப்பாற்றினர் கிளி.பொலிஸார்

கிளிநொச்சி, மே 11

வீதி விபத்தில் படுகாயமடைந்த சிறுத்தையை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாற்று பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.


சிறுத்தை வீதியைக் கடக்க முற்பட்டவேளை வீதியால் சென்ற டிப்பர் வாகனத்தில் மோதுண்டு படுகாயமடைந்துள்ளது. குறித்த சிறுத்தையை பொலிஸார் மீட்டு முதலுதவி சிகிச்சை வழங்கிய பின்னர், அதனை பாதுகாப்பாக அருகில் உள்ள காட்டுப் பகுதியில் விட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-113,6)

## முல்லைத்தீவில் மேலும் இருவருக்குத் தொற்று

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 9ஆம் திகதி கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின்படி மேலும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் கடந்த 7ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவின் அடிப்படையில் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஒருவர் மற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் ஆகியோருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ச-19)





## 'மாஸ்க்' அணியாத 9 பேர் மீது வழக்கு

### முல்லையில் அதிரடி

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட முள்ளியவளை பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள முள்ளியவளை, தண்ணீரூற்று மற்றும் நீராவிப்பிட்டி ஆகிய பகுதிகளில் முகக்கவசம் அணியாது நடமாடிய 9 பேர் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்படுவோரை கைதுசெய்யும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் நிலையில் முள்ளியவளை பொலிஸாரும், பொதுச் சுகாதார பரிசோதகர்களும் இணைந்து மேற்கொண்ட பரிசோதனை நடவடிக்கையின்போது இரு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட ஒன்பது பேர் முகக்கவசம் அணியாத நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவர்கள் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த 9 பேரின் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 13ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் எடுக்கக் கொள்ளப்படும் என [illegible] முள்ளியவளை பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழா பிற்போடல்

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா பிற்போடப்பட்டுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். தற்போதைய நாட்டின் சூழ்நிலை கருதி இந்த வருடத்துக்கான திருவிழாவை பிற்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பரிபாலன சபைத் தலைவர் தெரிவித்தார். ஆலய மகோற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-17)


THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**கண்ணிவெடி அகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்**

ஹலோ ட்றஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 23 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்ற் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண். பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்பரவற்றதும். தேக வலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக் கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

**குறிப்பு :** சகோதர மொழி பேசும் ஆர்வமுடையவமுடைய விண்ணப்பதாரிகளும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவைகளை **எதிர்வரும் 18ம் திகதி மே மாதம் 2021 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.**

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்றஸ்ற்**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

VACANCY ANOUNCEMENT FOR THE POSITION OF
SAFEGUARDING OFFICER - MALE

The HALO Trust is a non-political and non-religious registered British charity, which removes land mines and other explosive remnants of war. HALO works in 25 countries and territories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu.

HALO is seeking talented and hardworking candidates for the role of Male Safeguarding Officer. All applications must be submitted on or before 20th May 2021. Only successful candidates will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds.

**Qualifications / Minimum requirements:**

- Fluency in English and Tamil both verbal and written communication. Knowledge of Sinhala as well would be advantageous.
- Past work experience as GBV focal point, gender focal point or social worker is an added advantage.
- More than 3 years' experience in the relevant field.
- Candidates with experience of delivery of training modules would be of benefit.
- Candidates with experience in mediation board are encouraged to apply.
- Previous NGO or INGO experience are preferred.

**Interested candidates must submit their CV with name and contact details to the below address or e-mail.**

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi**
**hr@halosrilanka.org**


வவுனியாவில்

## இராணுவச் சிப்பாய்களுக்கு கொரோனாத் தொற்றுறுதி

வவுனியா, மே 11

வவுனியா ஒலுமடு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

குறித்த இருவருக்கும் திடீர் சுகயீனம் ஏற்பட்டமையால் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதன்போது அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ச-110)

## நோயாளர் நலன் கருதி வீடுகளுக்கே மருந்துகள்

### விசேட நடவடிக்கை

கொழும்பு, மே 11

நாட்டின் தற்போதைய கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு, நோயாளர்களின் நலன் கருதி மருந்து வகைகளை தமது வீடுகளுக்கே வரவழைத்து பெற்றுக்கொள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, கண்டி, குருநாகல், கொழும்பு-1, கொழும்பு -4, கொழும்பு - 7 மற்றும் கம்பஹா ஆகிய பிரதேசங்களில் உள்ளவர்கள் மருந்து வகைகளை பெற்றுக்கொள்ள தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் 800 கிராம் கஞ்சா போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தக் கைதில், இதே பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவரே கைது செய்யப்பட்டவராவார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-19)

## கல்லிருப்பு கண்ணகியின் பொங்கல் இடைநிறுத்தம்

கிளிநொச்சி, மே 11

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்திலுள்ள கல்லிருப்பு கண்ணகி அம்மன் கோவில் வருடாந்தப் பொங்கல் நிகழ்வு கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, நாளாந்த பூசைபோல் உற்சவ உபயகாரர்கள் 5 பேர் அடங்கிய குழுவுடன் பூசையை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பரிபாலன சபைத் தலைவர் பரமநாதன் யோகநாதன் தெரிவித்துள்ளார். (த-6,12)


# 31ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
30 . 03 . 1944



ஆண்டவன் அடியில்
13 . 04 . 2021

கடந்த 13.04.2021 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

## அமரர் சோ.தெய்வநாயகி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (.2.05.2021) புதன்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 13.05.2021 வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், பதாகைகள், கண்ணீர் அஞ்சலிகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்போது கொரோனா தொற்றினால் நிலவும் இக்கட்டான சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய [illegible] அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

11/1, நாயன்மார் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
0777 158 570


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2021/03
## Regional Directorate of Health Services Jaffna

01. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

04. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents and in the bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.

05. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.

06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax:0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.

07. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

08. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 02.30 P.M on the date mentioned in the table.

09. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | From12.05.2021 until 25.05.2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 02.30 P.M on 18.05.2021 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 28.05.2021 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2021/PSSP/W/05 | Construction of Ambulance Garage at BH Chavakachcheri,Jaffna. | 3.14 | 89 Days | C 8 and C7 (Buildings) | 1,500.00 | 32,000.00 | Till 27.08.2021 |
| NP/04/41/2021/PSSP/W/06 | Improvement Work Mortuary at Base Hospital Point Pedro. | 11.11 | 138 Days | C 6or C5 (Buildings) | 3,500.00 | 112,000.00 | Till 10.09.2021 |
| NP/04/41/2021/LM/W/01 | Construction of Thiriposha Store at Myliddy,Jaffna. | 5.75 | 109 Days | C7 and C6 (Buildings) | 3,500.00 | 75,000.00 | Till 10.09.2021 |
| NP/04/41/2021/LM/W/02 | Construction of Staff Quarters at Divisional Hospital,Alaveddy,Jaffna . | 3.39 | 91 Days | C 8 and C7 (Buildings) | 1,500.00 | 35,000.00 | Till 27.08.2021 |
| NP/04/41/2021/LM/W/03 | Improvement Work (Fencing Work) at Myliddy,Jaffna. | 2.31 | 82Days | C 8 and C7 (Buildings) | 1,000.00 | 24,000.00 | Till 27.08.2021 |
| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | From12.05.2021 until 25.05.2021 | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 P.M on 18.05.2021 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 28.05.2021 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2021/PSDG/W/04 | Improvement Work at Base Hospital Tellippalai,Jaffna-Kitchen,OPD and EU | 0.926 | 68 | C 9 and C8 (Buildings) | 1,000.00 | 10,000.00 | 13.08.2021 |
| NP/04/41/2021/MSD/W/01 | Improving Store Facilities for RMSD at Jaffna. | 1.657 | 76 | C 9 and C8 (Buildings) | 1,000.00 | 17,000.00 | 13.08.2021 |
| NP/04/41/2021/PSSP/W/05 | Repair and Renovation of Kitchen at Divisional Hospital Kurunagar,Jaffna | 0.536 | 57 | C 9 and C8 (Buildings) | 1,000.00 | 6,000.00 | 13.08.2021 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
***Jaffna.***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்கு வலயத்தில் அல்– இக்பால் ம.வி. முதலிடம்

வவுனியா, மே 11

அண்மையில் வெளியாகிய 2020ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை சித்தி வீதத்தில் வவுனியா தெற்கு வலயத்தில் அல் இக்பால் மகாவித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளது.

சித்தி வீதம் தொடர்பில் வடமாகாண கல்வித் திணைக்களம் வெளியிட்டுள்ள பகுப்பாய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வவுனியா தெற்கு வலயத்தில் 27 பாடசாலைகளில் இருந்து ஆயிரத்து 608 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். அதில் 936 மாணவர்களே முழுமையாக மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றுள்ளனர்.

அந்த வகையில் பரீட்சைக்கு தோற்றிய 27 பாடசாலைகளில் தோற்றிய மாணவர்களின் சித்தி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு 93.33 சித்தி வீதத்தைப் பெற்றுள்ள சூடுவெந்த புலவு அல் இக்பால் மகாவித்தியாலயம் வவுனியா தெற்கு வலயத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், கந்தபுரம் வாணி வித்தியா லயம் 90 வீத சித்தியைப்பெற்று தெற்கு வலயத்தில் இரண்டாம் நிலையையும், பூவரசன்குளம் மகாவித்தியாலயம் 84.62 வீத சித்தியைப் பெற்று தெற்கு வலயத்தில் மூன்றாம் நிலையையும் பெற்றுள்ளன. (ஐ-110,18)

# சுகாதார தொண்டர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே 11

கொரோனா தடுப்பு நடவடிக்கையில் சிறப்பாக பணியாற்றிய யாழ்ப்பாண மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையைச் சேர்ந்த 32 சுகாதார தொண்டர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வு மருத்துவ அதிகாரி பணிமனையில் கடந்த செவ்வாய்க்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். உதயபாலா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சுகாதாரத் தொண்டர்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ஐ-17)



# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
21 . 03 . 1934



இறைவன் அடியில்
09 . 05 . 2021

**திரு. விஸ்வலிங்கம் சிவஞானம் (திரவியம்)**

உடுப்பிட்டி வாசிகசாலையடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. விஸ்வலிங்கம் சிவஞானம் (திரவியம்) நேற்றுமுன்தினம் (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - லெட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமிகு மருமகனும், அன்னபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் ரவீந்திரன், செந்தமிழ்ச்செல்வன், பத்மாவதி, ரமேஸ், காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருஞானம் (சுந்தரி), காலஞ்சென்ற சொர்ணகாந்தி ஆகியோரரின் பாசமிகு சகோதரரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயதீஸ்வரன், ராதா, நித்தியா, வாணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரதீபன், ராகவி, பானுஜன், ஹோவர்த்தனன், சஞ்சீவி, அபிஷாந், சந்தோஷி, மகிபன், ஹரிசாந், பிரணவி, ஆகியோரின் அன்புப் பேரனும் நிநிந்தன், நிநிந்தினி, நிநிந்துஜா, நிநிந்தீபன், நிநிந்துறுபன் ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
வாசிகசாலையடி,
உடுப்பிட்டி,யாழ்ப்பாணம்.
Tel.: 0212263960
0766100610

# நாட்டை முடக்கோம்

## அரசு அறிவிப்பு

**கொழும்பு, மே 11**

**கொரோனாத் தொற்றுக்காக நாட்டை முழுமையாக முடக்க முடியாது என்று அரசு தெளிவாக அறிவித்துள்ளது. எனினும் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

மஹரகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட் வைரஸ் தாக்கத்தால், தேசிய பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. நாட்டை முழுமையாக முடக்க வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். நாட்டை முழுமையாக முடக்கினால் மக்கள் பொருளாதார மட்டத்தில் மேலும் பாதிக்கப்படுவர். எனவே நாடு முடக்கப்படாது.

நல்லாட்சி அரசின் காலத்தில் அரசியல் நோக்கங்களுக்காக இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எந்தக் காரணிகளுக்காகவும் அபிவிருத்திப் பணிகள் இனி இடைநிறுத்தப்படாது- என்றார். (ம-4)



நிலைமை மிக மோசம்

# முழு நாட்டையும் உடன் முடக்குக!

## தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை

கொழும்பு, மே 11

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த வேண்டுமெனில் முழு நாட்டையும் மூன்று வாரங்களுக் காவது முடக்குவதற்கு அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கொரோனாவால் இந்த நாட்டில் தற்போது நாளொன்றுக்கு 22 பேர் உயிரிழக்கின்றனர். 2 ஆயிரத்து 60 பேர் தொற்றாளர்களாக அறிவிக்கப்படுகின்றனர். அதுமட்டுமல்ல கர்ப்பிணித் தாய்மாரும், பச்சிளம் பாலகர்களும்கூட பலியாகும் நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் வொஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வு நிறுவன மொன்று அபாய எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது. இந்நிலைமை தொடருமானால் செப்ரெம்பர் ஆகும் வரை 20 ஆயிரம் பேர் மரணிக்கக்கூடும் எனவும், நாளொன்றுக்கான மரணம் 250 ஐ தொட கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி, எச்சரிக்கையாக இருக்கவேண்டும். எனவே, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்காவது நாட்டை முழுமையாக முடக்குமாறு அரசிடம் கேட்டுக்கொள்கின்றேன். எனினும், 2 விடயங்களுக்காக அரசு இதனை செய்யாமல் இருக்கக்கூடும். - என்றார். (ம-44)

விருந்தில் கலந்துகொண்ட

# கணவருக்கு காய்ச்சல் மனைவிக்கு தொற்று

விருந்தொன்றில் கலந்து கொண்ட கணவர் காய்ச்சலுடன் தப்பிக் கொள்ள மனைவி தொற்றுக்கு உள்ளானார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சிவன் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது.

மிருசுவில் உசன் பகுதியில் இடம்பெற்ற பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்றுக்கு கணவன் சென்று வந்துள்ளார். அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டு பின்னர் குணமடைந்தார். அவரது மனைவிக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.

அங்கு அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை நடத்தி அங்குள்ள விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் வெளியான பரிசோதனை அறிக்கையில் குறித்த பெண்ணுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து தென்மராட்சி பிரதேசத்தில் எந்தவொரு நிகழ்வும் நடத்துவதற்கு சுகாதார பகுதியினர் தடை விதித்துள்ளனர். தடையை மீறி நிகழ்வு நடத்துகின்றமை கண்டறியப்பட்டால் நிகழ்வை நடத்தியவர் உட்பட அவரது குடும்பத்தினருடன் தனிமைப்படுத்தப்படுவார்கள். மேலும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)



மேல் மாகாணத்தில்

# 10 நாள்களில் 10,000 தொற்று

கொழும்பு, மே 11

மேல் மாகாணத்தில் கடந்த முதலாம் திகதி முதல் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி மே 1 முதல் 10ஆம் திகதி காலை வரை கொழும்பு மாவட்டத்தில் 4 ஆயிரத்து 246 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 239 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 514 பேருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது. நேற்றைய தினமும் இந்த மாகாணத்தில் 500க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அதேவேளை, மே முதலாம் திகதி முதல் 10ஆம் திகதி காலைவரை யாழ். மாவட்டத்தில் 203 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 40 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 23 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 13 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 61 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

இதற்கிடையில் கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் 210 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-44)

# மேலும் 16 கிராம அலுவலர் பிரிவுகள் முடக்கம்

கொழும்பு, மே 11

நாட்டில் மேலும் 5 மாவட்டங்களில் 16 கிராம சேவகர் பிரிவுகள் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. கம்பஹா, அம்பாறை, இரத்தினபுரி, களுத்துறை, மொனராகலை மாவட்டங்களைச் சேர்ந்த கிராம அலுவலர் பிரிவுகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (ம)

# பணிப்பாளரிடம் சென்றவருக்கு கொவிட் தொற்று உறுதியானது

அவர் சென்ற பகுதி முழுவதும் தொற்றுநீக்கம்

பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்ட ஒருவர் அதன் பெறுபேற்று அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் அலுவலகத் தொகுதிக்குச் சென்றுள்ளார். அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதால் அந்தப் பகுதியில் தொற்றுநீக்கம் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பி.சி.ஆர். பரிசோதனையை நபர் ஒருவர் மேற்கொண்டுள்ளார். அவர் அதன் அறிக்கையைப் பெறுவது எங்கு என்று தெரியாமல் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் அலுவலகத் தொகுதிக்குச் சென்றுள்ளார். அவர் அங்கு நீண்ட நேரம் இருந்துள்ளார். பின்னர் விடயமறிந்த பணியாளர்கள் அவரை சம்பந்தப்பட்ட இடத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர். அவருக்கு பி.சி.ஆர். அறிக்கை வழங்கும்போதே அவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்ற விடயம் தெரியவந்தது. தொற்றுக்குள்ளான அவர் பணிப்பாளர் அலுவலகப் பகுதிக்குச் சென்றிருந்தார் என்பதனால், பணிப்பாளர் அலுவலகத் தொகுதிக்குள் அவர் நடமாடிய இடங்கள் உடனடியாக தொற்றுநீக்கம் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ.5)

# சீன அமைச்சரின் இலங்கைப் பயணம் உறுதி

கொழும்பு, மே 11

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஈயின் இலங்கைப் பயணத்தை கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று உறுதிப்படுத்தினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது, சீன வெளிவிவகார அமைச்சர் எப்போது இலங்கை வருகிறார் என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, அவர் இவ்வாறு உறுதிப்படுத்தினார்.

'சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை வரு[illegible] வதற்கு கொள்கை ரீதியில் முடிவெடுத்துள்ளார். அதற்கான திகதி விபரங்களை வெளிவிவகார அமைச்சு வெளியிடும்' என்றார் அமைச்சர் பீரிஸ்.

அதேவேளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டவரைபு தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைக்கும் திருத்தங்களை அரசு ஏ[illegible] நாடாளுமன்றத்தில் நடைபெறும்குழுநிலை [illegible] விவாதத்தின்போது திருத்தங்கள் உள்வாங்கப்பட[illegible] எனவும் இதன்போது அமைச்சர் கருத்து வெ[illegible]ர். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவேல மரங்களை அகற்ற சில திணைக்களங்கள் தடை

## செல்வம் எம்.பி. குற்றச்சாட்டு

**மன்னார், மே 11**

**மன்னாரில் உள்ள கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்படும். இந்த மரங்களை அகற்ற வனவள பிரிவு மற்றும் பறவைகள் சரணாலயங்கள் திணைக்களம் ஆகியவை தடையை ஏற்படுத்தி வருகின்றன என்று வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் விவசாயம், தோட்டப் பயிர்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற நன்மை தரும் செயற்பாடுகளைக் கூட்ட வேண்டுமாக இருந்தால் இந்த மரங்களை அழிப்பதற்கான முயற்சி களை மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் மன்னார் மாவட்டம் வெப்பத்தின் ஆளுமை மிகவும் கூடிய பிரதேசமாக காணப் படும். எந்தவித நன்மையும் இல் லாத கருவேல மரங்களை அழித்து நன்மை பயக்கும் மரங்களை நட வேண்டும். அப்போதுதான் மன் னார் மாவட்டம் செழிப்பான மாவட் டமாக மாறும். இந்த மரங்களை அகற்றுவதற்கு வனவள பிரிவு மற்றும் பறவைகள் சரணாலயங் கள் திணைக்களம் ஆகியவை தடையை ஏற்படுத்தி வருகின்றன. இந்த திணைக்களங்களால் மக் கள் விவசாயம் செய்ய முடியாமல், வீடுகளைக் கட்ட முடியாமல் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின் றனர். அந்த வகையில் கருவேல மரங்களை அகற்றும் நடவடிக்கை கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு அதிகாரிகளிடம் பேசி மரங்களை வெட்டுவதற்கான அனு மதி பெறவேண்டும். அதேநேரம் நடை பெற இருக்கும் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தீர்மானத்தை எடுத்து இந்த மரங்களை அகற்றுவ தற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ-213)

# சர்மாவின் சிவப்பிராப்திக்கு பிரார்த்தனை செய்கிறோம்

### இந்துக் குருமார் அமைப்பு இரங்கல்

யாழ்ப்பாணம், மே 11

கடந்த ஏழு வருடங்களாக இந்து குருமார் அமைப்பின் செயலராகப் பதவி வகித்ததோடு, இந்துக் குருமார் அமைப்பின் சமய சமூகம் சார்ந்த பணிகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்ட பிரம்மசிறீ கார்த்திகேசு சர்மா சந்தி ரசேகர சர்மாவின் இறைபதச் செய்தி அறிந்து மிகவும் கவலை அடைகின்றோம் என்று இரங் கல் தெரிவித்துள்ளார் இந்துக் குருமார் அமைப் பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க.வைத் தீஸ்வர குருக்கள்.

யாழ்ப்பாணம் கீரிமலையை பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், அனைவராலும் கீரிமலை சந்திரண்ணா, கீரி மலை சந்திரன் ஐயா என அறியப்பட்டவர் அழைக்கப்பட்டவர்.

இந்துக் குருமார் அமைப்பின் சமய சமூகம் சார்ந்த பணிகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டவர். முன்னுதாரணமாக செயற்பட்ட வர். மாணவர்களின் கல்விக்கு இயன்றளவில் உதவியுடன் ஊக்குவிப்பு வழங்கும் செயற்பா டுகளில் ஈடுபட்டு வந்தார்.

அவரது திடீர் இறப்பு கவலையளிக்கின்றது. அவரின் ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உரு வான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த் தனை செய்கின்றோம். அத்துடன் உறவுகளு டன் எமது ஆறுதலை பகிர்ந்துகொள்கிறோம் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

# மின்தடை

யாழ்ப்பாணம், மே 11

**உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த** மின்விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைக ளுக்காக இன்று 11 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 8 மணியிலி ருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** ஜம்புகோளப்பட்டி னம் ஓய்வு விடுதி, ஜம்புகோளப்பட்ட னம், காட்டுப்புலம், குசுமாந்துறை மாதகல் மாதகல் இறங்குதுறை ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி மாவட்டத்தில்** 66ம் பிரிவு இரா ணுவ முகாம் பூநகரி, அரசபுரம் இரா ணுவ முகாம், செல்லையாதீவு, பிர தேச செயலகம் பூநகரி, 4 வது மைல் கல் பூநகரி, அரசபுரம், ஞானிமடம், கௌதாரிமுனை, களவெடித்திடல், காஞ்சிபுரம், கருக்காய்த்தீவு, கொல் லக்குறிச்சி தம்பிராய் குஞ்சுப்பரந்தன், முச்சிரன்பிட்டி, முட்கொம்பன், முட் கொம்பன் சந்தி, நல்லூர் பூநகரி, நேரடம்பன், நெற்பிளவு, ஓவசியர் கடை சந்தி, பள்ளிக்குடா, பள்ளிக் குடா சுனாமித் திட்டம், பரமங்கிராய், பரமன்கிராய், புளியம்பொக்கணை கோவில், செம்மண்குன்று, சின்ன பல்லவராயன்கட்டு, தம்பிராய், தர ணிக் குடியிருப்பு, வாடியடி பூநகரி, வெட்டுக்காடு (கௌதாரிமுனை), வீரையடி, விநாசியோடை (கௌதாரி முனை) ஆகிய இடங்களிலும், **வவு னியா மாவட்டத்தில்** குருக்கள் புதுக்குளம் மணியர்குளம், மகாகச் சக்கொடிய தரணிக்குளம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் ஹனைஸ் நகர், கரடிக்குழி, காயக் குழி திட்டம், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங் குளம் திட்டம் (ஜீனத் நகர்), மறிச்சுக் கட்டி, முள்ளிக்குளம், பாலைக்குழி, பாலைக்குழி திட்டம் ஆகிய பிரதேசங் களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கருவேல மரங்களில் வெளியேறும் நச்சுவாயு உளவியல் மாற்றத்தையும் ஏற்படுத்தும்

## நானாட்டான் பிரதேச செயலர் தெரிவிப்பு

மன்னார், மே 11

கருவேல முள்ளு மரங்களில் இருந்து வெளியாகும் நச்சுவாயு மனிதர்களிடையே உளவியல் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நானாட்டான் பிரதேச செயலர் மாணிக்கவாசகர் சிறிஸ்கந்த கு மார் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் பற்றை களாகக் காணப்படும் கருவேல முள்ளு மரங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தின் 2002. 07 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப் பில் மிகவும் அபாயகரமானது என்று கருதப்படும் இந்த கரு வேல மரங்கள் படர்ந்து காணப் படுகின்றன.

இந்த தாவரம் ஏனைய தாவரங் களோடு போட்டிபோட்டு அவற்றை விட சிறப்பாக வளரக்கூடியது இதனால் மன்னார் மாவட்டத் துக்கு உரித்தான பல மூலிகை மரங்களும் வளர்ச்சி அடையா மல் அழிந்து போகக்கூடிய சூழ் நிலை உருவாகியிருக்கின்றது. இதன் வேர்த் தொகுதி மிக ஆழ மான பகுதியில் இருந்து நீரை உறிஞ்சி எடுத்து மிகவும் பசுமை யாக வளரக்கூடியது. எனவே இந்த தாவரம் எமது பிரதேசத்துக்கு அழிவைக் கொண்டுவருகின்ற தாவரமாக காணப்படுகின்றது.

இந்த மரத்தின் மகரந்தத்தில் இருந்து வருகின்ற வாசனை மனிதருடைய மனங்களில் பாத கமான சிந்தனை ஓட்டத்தை ஏற்படுத்தக்கூடியது என்று அமெ ரிக்க ஆய்வுகள் குறிப்பிடு கின்றன.

இந்த மரங்கள் இருக்கும் பிரதே சங்களை தொடர்ச்சியாகப் பயன் படுத்துவோர் மற்றும் அந்தப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் ஆகியோர் மனநிலையில் பாதிப் புக்கள் ஏற்படவும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இந்தக் கருவேல மரங்களை அகற்ற - அழிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஐ-213)




# மாநகர காணியைச் சுற்றி முட்கம்பிவேலி அமைப்பு

யாழ்ப்பாணம், மே 11

நல்லூர் கோவில் பின் பகுதி, பருத்தித்துறை வீதியில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக யாழ். மாநகர சபைக்கு சொந்தமான காணியைச் சுற்றி முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. அது மாநகர சபைக்குரிய காணி என்று அறிவித்தல் பல கையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் இதுவரை காலமும் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தப்படாமல், திறந்த வெளியாக காணப்பட்டது. அந்தப் பகுதியில் சில வர்த்தக நிறு வனங்கள் மாநகர சபை அனுமதியுடன் உரிய குத் தகை பணம் செலுத்தி தமது பொருள்களின் வியாபார மற்றும் விளம்பர நோக்கங்களுக்கு பயன்படுத்தின. இதேவேளை, சிலர் அந்த ஆதனத்துக்குள் அத்துமீறி செயற்பட்டு வந்துள்ளனர். இந்த நிலையில் முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. (த-20)



முல்லைத்தீவு மாவட்டத்தில் நலிவடைந்தோர் உதவிச்சங்கத்தின் ஊடாக வட்டுவாகல் கிராமத்தில் வசிக்கும் குடும்பமொன்றின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தும் நோக்கில் 100 கோழிகள் வழங்கப்பட்டன. அந்தக் குடும்பத்தின் தலைவர் [illegible] ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

# மணல் அகழ்ந்த ஐவர் கைது

கிளிநொச்சி, மே 11

துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட புத்து வெட்டுவான் கிராமத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் ஐவரை ஐயன்குளம் பொலிஸார் கைதுசெய்து பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர்.

புத்துவெட்டுவான் ஆற்றுப் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு நடைபெறுகிறது என்று கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று அவர்க ளைக் கைதுசெய்தோம் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்பரப்புக்களில் இறுக்கமான கண்காணிப்புகள் நடைமுறை!

கொழும்பு, மே 11

**இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்புக்களின் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைவாக 24 மணித்தியாலங்க ளும் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.**

இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளால் இலங்கைக் குள் இந்தியத் திரிபு வைரஸ் பரவு வதற்கு அதிக வாய்ப்புக்கள் உள் ளன.

இதனால் இந்தியா போன்று இலங் கையிலும் பேரழிவு ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்ட நிலையில் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவும் சூழலில், கடல் மார்க்கமாக இலங்கைக்குள் யாரேனும் நுழைவதைத் தடுக் கும் பொருட்டு பாதுகாப்பு நடவடிக் கைகள் இரட்டிப்பாக்கப்பட்டுள் ளன. அதற்கமைவாக ரோந்து மற்றும் இதர பணிகளில் ஈடுபடுத் தப்படும் படகுகளின் எண்ணிக்கை யும் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடற்ப ரப்புக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக கரையோரம் மற்றும் ஆழ்கடலில் கடற்படைப் படகுகள் மற்றும் கண்காணிப்புக் கப்பல்கள் ஆகியவற்றின் உதவி யுடன் முழுமையான மேற்பார்வை களை முன்னெடுக்கவும், சர்வதேச கடற்பரப்பில் கடற்படையின் அதிவே கப் படகுகள் மற்றும் தாக்குதல் பட குகளைக் கடமையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-4)

## ஒப்பந்தங்களை மீறினால் அரசுக்கே பெரும் இழப்பு

### காரணம் கூறுகின்றார் நிமல்



கொழும்பு, மே 11

இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்ப தற்காக வெளிநாடுகளுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந் தங்கள் மீறப்பட்டால், சம்பந்தப் பட்ட நிறுவனங்களுக்கு அதிக பணத்தைச் செலுத்த வேண்டி ஏற்படும். அவ்வாறு செலுத்து வதாயின் நாட்டு மக்களின் வரிப் பணத்தையே செலுத்த வேண்டும். அதனால் தான் ஒப்பந்தம் செய்யப்பட்ட அபிவிருத்திப் பணிகள் தாமதமின்றி முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறு கிராமிய வீதி அடிப்படை வசதிகள் இராஜாங்க அமைச் சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்று தடுப்புக்காக உள்ள பணத்தை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின் றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்துகின் றார். இந்த நிலையில் அபிவிருத்திக்கான நிதியை வேறு எதற்கும் பயன்படுத்த முடியாது என்பதை அவர் அறியவில்லை. அரசால் கொள்வனவு செய்யப்பட வுள்ள ஹெலிகொப்டர் ரஷ்யக் கடன் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இந்த ஹெலிகொப்டர் ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையுடன் இணைந்து செயற்படவுள்ளது. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் பணிகள் 2 வருடம் தாமதமடைந்ததால், 4 ஆயிரம் மில் லியன் ரூபாவை மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளது. எனவே ஜனாதிபதி கோத்தாபய மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதுடன், நாட்டின் அபிவிருத்திப் பணிகளையும் தொடர்ந்து முன்னெ டுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார் - என்றார். (ம-4)

## கொரோனாவை கட்டுப்படுத்த நட்பு நாடுகளை நாடுங்கள்

### ஐ.ம.ச. வலியுறுத்து

கொழும்பு,மே 11

இலங்கையில் கொரோனாவைக் கட் டுப்படுத்த நட்பு நாடுகளுடன் சுமூக மான உறவைப் பேண வேண்டும். நாட்டுக்குத் தேவையான சகல மருத் துவ உபகரணங்களையும், அவற்றி டமிருந்து துரிதமாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ் வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடா ளுமன்ற உறுப்பினர் கயந்த கருணா திலக வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலை வர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்சிசன் சிலிண்டர்கள், அவசர சிகிச்சைப்பிரிவு உபகரணங்கள் மற்றும் அம்புலன்ஸ் வண்டிகள் ஆகியவை உள்ளிட்ட மருத்துவ தேவைகளில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தால், அதனை ஏற்றுக்கொண்டு, துரிதமாக நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பி.சி.ஆர். பரிசோ தனைகளின் அளவை அதிகரிப்ப தோடு, ஏற்றுக் கொள்ளப்பட்ட தடுப்பூசி களைப் பெற்றுக்கொள்ளவும் நடவ டிக்கை எடுக்கப்படவேண்டும்.

அவ்வாறில்லை என்றால் மருத்துவர் கள் கூறுவதைப் போன்று எதிர்வரும் வாரங்களில் ஏற்படக்கூடிய பாரதூர மான நிலைமையிலிருந்து நாட்டை மீட்க முடியாது. கட்டங்களைத் தெரிவு செய்து படுக்கைகளை ஏற்பாடு செய் தால் மாத்திரம் போதாது. தொற்றாளர் களுக்குச் சிகிச்சையளிப்ப தற்குத் தேவையான மருத்துவர்கள், தாதிகள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களைப் பணிக்கமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கொவிட் கட்டுப்படுத்தலுக் காக கிடைக்கப்பெற்ற நன்கொடைகளை இப்போதேனும் மக்களுக்காகப் பயன் படுத்த வேண்டும் - என்றார். (ம-4)



உயர்தரப் பரீட்சையில்

## தேசியத்தில் முதலிடம் பெற்ற மாணவனை நேரில்சென்று வாழ்த்தினார் சரவணபவன்

யாழ்ப்பாணம், மே 11

க.பொ.த. உயர்தர பரீட்சையில் கணிதப்பிரிவில் '3ஏ' சித்தி களோடு தேசிய மட்டத்தில் முதல் நிலையைப் பெற்ற மாணவனை யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் நேரில்சென்று வாழ்த்தினார்.

ஆசிரியர் பிரதாப், வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்பிரிக்கோ, சிவில் சமூக செயற்பாட்டாளர் குணாளன் மற்றும் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட மகளிர் அணி செய லாளர் விமலேஸ்வரி ஆகியோரும் சரவணபவனுடன் உடன் சென்று மாணவனை வாழ்த்தினர். (ச-319)

## தலைதுண்டிக்கப்பட்ட உடல் இலங்கைக்கு

கொழும்பு,மே 11

தலை துண்டிக்கப்பட்ட நிலையில் குவைத்தில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த பெண்ணின் உடல் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கட்டார் எயார்வேஸ் விமானம் மூலமாக, கட்டுநா யக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலை யத்துக்கு குறித்த உடல் நேற்றுமுன்தினம் எடுத்து வரப்பட்டது.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர் மஹாவப் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## ஜனாஸாக்களை குளிரூட்டியில் வைத்து பாதுகாக்கும் நிலைமை ஏற்படலாம்

### ஓட்டமாவடி சபைச் செயலாளர் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, மே 11

ஓட்டமாவடிக்கும் தனிமைப்படுத்தல் நிலைமை ஏற்பட்டால், கொரோனாவால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்களை பல நாள்கள் குளிரூட்டிகளில் வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்ப டலாம் என ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் தெரி வித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓட்டமாவடி பிரதேசத்தில் கொவிட்டால் உயிரிழப்போரின் ஜனாஸா நல்லடக்கப் பணிகளை இரு உலமாக்கள், பிரதேச சபை ஊழியர்கள், சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகா கள், ஜனாஸா நலன்புரிச் சங்கத்தினர், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் இரா ணுவத்தினர் ஆகியோர் மிகவும் கரிசனை யுடனும், தியாகத்துடனும் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று வரை (நேற்றுமுன்தினம்) நூற் றுக்கும் மேற்பட்ட ஜனாஸாக்கள் நல்ல டக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலை யில் நாட்டில் இன்று மிக வேகமாகப் பரவி வரும் பயங்கரமான கொவிட் 19 தாக்கம் காரணமாக உயிரிழப்புக்கள் அதிகரித்து வருவதையும், நல்லடக்கப் பணிகளில் சிரமங்களும், ஆபத்துக்களும் அதிகரிப் பதையும் நாம் அறிவோம். இந்த வேகத் தில் ஓட்டமாவடி பகுதியும் கொரோனாத் தாக்கத்தின் காரணமாக தனிமைப்படுத் தல் நிலைமைக்கு உட்படுத்தப்பட்டால், கொரோனாவால் நாடளாவிய ரீதியில் உயிரிழக்கும் ஜனாஸாக்களை நல்லடக் கம் செய்யமுடியாமல் பல நாள்கள் அவற்றை குளிரூட்டிகளில் வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட லாம். எனவே நிலைமைகளை மிகக் கவனமாகக் கையாளும் முகமாக கொரோனாவால் உயிரிழக்கும் ஜனா ஸாவை நல்லடக்கம் செய்யும் இடத்துக்கு நெருங்கிய உறவினர்கள் இருவர் மற்றும் வாகனச் சாரதி ஆகியோரை மாத்திரமே பாதுகாப்புப் படையினர் உள்வர அனுபதிப் பதால் இருவர் மாத்திரமே உடன் வருமா றும், ஏனையோர் வருவதை முழுமையாகத் தவிர்ந்து கொள்ளுமாறும் வினயமுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றார். (-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

**மேடம்:** வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேறும். ஆதாயம் கூடும். பயணங்களின்போது எச்சரிக்கை தேவை. சிக்கல்கள் தீரும். சுபச்செலவு உண்டு. முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**இடபம்:** செல்வ நிலை உயரும். முயற்சியில் வெற்றி அடைவீர்கள். மந்த நிலை மாறும். உற்சாகம் அதிகரிக்கும். பெருமை கூடும். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதத்தில் நடந்து கொள்வர்.

**மிதுனம்:** இளைஞர்கள் எதிர்பார்த்த உயர்வு நிலையை அடைவர். உற்சாகமாக காணப்படுவீர்கள். செயல்களில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். உழைப்பு அதிகமாகும்.

**கடகம்:** பணியாளர்கள் எதிர்பாலினத்தாரால் நன்மை பெறுவீர்கள். பொதுநல சேவையில் ஆர்வம் அதிகரிக்கும். ஏக்கம் ஒன்று தீரும். வாட்டம் தீரும். வாழ்க்கை முறையில் சிக்கல் தீர்ந்து ஒழுங்காகும்.

**சிம்மம்:** மன நிறைவை அனுபவிப்பீர்கள். உங்களுக்கு ஆதரவுகள் அதிகரிக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி அடைவீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி:** பணிவு வரவேண்டும். யாரிடமும் கவனமாகப் பழகுவது நல்லது. நல்லவர்போல் நடித்துத் தீங்கு செய்பவர்களிடம் கவனம் தேவை. அரசாங்கம் மூலம் நன்மை அடைவீர்கள்.

**துலாம்:** உடல்நலனில் கவனம் தேவைப்படும். பயணம் ரத்தாகும். உயர் நிலையை அடைவதற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள். கூடுதல் வருமானங்கள் உண்டு. வெற்றிகரமான நாள்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட செயல்களை செய்து முடிப்பீர்கள். அமைதி திரும்பும். பெண்கள் வழிபாட்டை மேற்கொண்டு நிம்மதி காண்பீர்கள். பயம் ஒன்று நீங்கும். குழந்தைகளின் வளர்ச்சி கூடுதலாக இருக்கும்.

**தனுசு:** உங்கள் கீழ் பணிபுரிவோர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உடனிருப்பவர்களால் சிறு சிறு தொல்லைகள் ஏற்படக்கூடும். பிறருக்காகக் கையெழுத்திடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** பிரிந்து சென்றவர்களை பற்றி கவலை கொள்ளாதீர்கள். அலுவலகத்தில் கூடுதல் பணியை கவனிக்க வேண்டி இருக்கும். உறவினர்களுடன் இருந்த பிரச்சினைகளை பேசித் தீர்ப்பீர்கள்..

**கும்பம்:** இளைஞர்கள் எதிர்பார்த்திருந்த வெற்றி, உழைப்பால் கிடைக்கும். எதிர்மறை எண்ணங்கள் எழும். தேவையற்ற கவலைகள் அதிகரிக்கும். பயணம் செல்ல நேரிடும்.

**மீனம்:** அரசியல் ஈடுபாட்டால் நன்மை ஏற்படும். நட்பு வட்டம் விரியும். விருந்தினர்கள் வருகையினால் சிறு விவாதம் ஏற்படும். எதிர்கால வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நிகழ்வு நடைபெறும்.

## சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 5 | |
| | | | | | 3 | | | 8 |
| 9 | | 8 | | 7 | | 2 | | |
| | | 3 | 7 | | | | 8 | |
| | 6 | | | | | 4 | | |
| 4 | | 1 | 9 | | 2 | | | |
| | 3 | 6 | 1 | | 9 | 7 | | |
| 7 | | 9 | | 5 | | | | |
| | 2 | | 8 | | | 3 | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 8 | 4 | 9 | 3 | 5 | 2 |
| 5 | 2 | 4 | 3 | 1 | 7 | 6 | 9 | 8 |
| 3 | 8 | 9 | 6 | 5 | 2 | 7 | 4 | 1 |
| 1 | 9 | 2 | 7 | 8 | 6 | 5 | 3 | 4 |
| 8 | 7 | 3 | 5 | 2 | 4 | 9 | 1 | 6 |
| 4 | 6 | 5 | 9 | 3 | 1 | 8 | 2 | 7 |
| 9 | 5 | 1 | 4 | 7 | 8 | 2 | 6 | 3 |
| 2 | 3 | 8 | 1 | 6 | 5 | 4 | 7 | 9 |
| 7 | 4 | 6 | 2 | 9 | 3 | 1 | 8 | 5 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்களும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.




## இயக்குநர் வெங்கட் பிரபுவின் தாயார் மரணம்

இசையமைப்பாளர் இளையராஜாவின் சகோதரரான கங்கை அமரன், நடிகர், இயக்குநர், பாடலாசிரியர் மற்றும் இசையமைப்பாளர் என பன்முகத்திறமை கொண்டவராக விளங்கினார். இவரது மூத்த மகன் வெங்கட் பிரபு, வெற்றிகரமான இயக்குநராகவும், நடிகராகவும் வலம்வருகிறார். இளையமகன் பிரேம்ஜி நடிகராகவும், இசையமைப்பாளராகவும் ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானார். இந்நிலையில், கங்கை அமரனின் மனைவியும், வெங்கட் பிரபு, பிரேம்ஜி ஆகியோரின் தாயாருமான மணிமேகலை நேற்றுமுன்தினம் இரவு காலமானார். உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது மறைவுக்கு திரையுலகினர் பலரும் இரங்கல் தெரி வித்து வருகின்றனர்.

# உஷ்ராசனம்

## (ஒட்டக வடிவம் போன்றது)

ஸ்ரீ. நதிபரன்
(யோகா போதனாசிரியர்)






**செய்(படி)முறைகள்:**

1. வஜ்ராசனத்தில் உட்காரவும். (முன்னர் இப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி)
2. பின்பு முழங்கால்களில் நிற்கவும். உடம்பு நேராக இருக்க வேண்டும்.
3. மூச்சை வெளிவிட்டவாறு உடம்பை பின்புறமாக வளைத்து இரு உள்ளங்கைகளையும் குதிக் கால்களின் மீது ஊன்றியபடி வைக்கவும்.
4. உச்ச நிலையில் ஆழமாக சுவாசிக்கவும். (சாதாரணமாக 08 சுவாசங்கள் வரை சுவாசிக்கலாம்.)
5. பின்னர் மெதுவாக இரு உள்ளங்கைகளையும் விடுவித்து 3ஆம் நிலைக்கு வரவும்.
6. பின்னர் மெதுவாக குதிக்கால்களின் மீது உட்காரவும். (வஜ்ராசனம்)
7. இடது காலையும் பின் வலது காலையும் மெதுவாக விடுவித்து ஆரம்ப நிலைக்கு வரவும்.


**பலன்கள் :** மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டம் அதிகரிக்கும், சிறுநீரகங்கள், அதிரீனல் சுரப்பிகள் நன்கு வேலை செய்யும். முதுகுத்தண்டு வளையும் தன்மை பெறுகின்றது. வயிற்றுப் பகுதி, உள்ளுறுப்புக்கள் நன்கு வேலை செய்கின்றன. நெஞ்சுப் பகுதி நன்கு விரிவடைகின்றது. இதனால் மார்பு விரிவடைந்து விலா எலும்புகள், இருதய தசைகள் பலமடைகின்றன. முதுகு வலி, கழுத்து வலி, சுவாசக் கோளாறுகள், முழங்கால்கள், கணுக்கால்கள், இடுப்பு வலிகள் குணமாகும். குடற்புண்கள், வாயுக்கோளாறுகள் நீங்கும் ஜீரணசக்தி அதிகரிக்கும்.

**குறிப்பு:** இதன் அரை நிலையாக அர்த்த உஸ்ராசனம் அதாவது 3 ஆம் படிமுறைக்கு வரவும். பின்னர் இருமணிக்கட்டுக்களையும் சேர்த்தவாறு இரு உள்ளங்கைகளாலும்; சிறுநீரகங்கள் அமைந்துள்ள நாரிப்பகுதியை அழுத்தியவாறு வைக்கவும்.

பின்னர் மூச்சை இழுத்தவாறு உடம்பினை பின்பக்கம் வளைக்கவும் .

உச்சநிலை - இந்நிலையில் ஆழமாக 08 சுவாசங்கள் வரை சுவாசிக்கலாம். பின்பு 4,5,6 ஆம் படிநிலைகளில் கூறியவாறு செய்யவும். உடல் உபாதைகள் உள்ளவர்கள் தகுந்த குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரத்துடன் மோதி கார் விபத்து

சாவகச்சேரி, மே 11

காரொன்று வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு உரும்பிராய்க்கும் மருதனார்மடத்துக்கும் இடையி லுள்ள பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காரில் பயணித்தவர்களுக்கு சிறுகாயங்கள் ஏற்பட்ட நிலையில் அவர்கள் யாழ். போதனா மருத்துவ மனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(ச-9)


**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணி-புரிவதற்கு பணிப்பெண் தேவை.

**076 751 8138**

**A/L இராசாயனவியல்**

Online Zoom
- Day Class
- 2021
- 2022

Paper Class - Organic

Mr.S.Sureshkumar B.sc (Hons) PGDE

T.P.: 077 555 9028 Brown Rd,Jaffna.


**தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலன சபை**

**THUMPALAI NELLANDAI AMMAN TEMPLE BOARD OF TRUSTEES**

தும்பளை Thumpalai | பதிவு இல.No - HA -5/JA/419 ஸ்தாபிதம் Estd 31.05.1945 | பருத்தித்துறை Pointpedro

வருடாந்த வெளிமடை உற்சவ அறிவித்தல் என்ற தலைப்பில் 07.05.2021 வெள்ளிக்கிழமை அன்று பிரசுரமாகிய விளம் பரத்தில் 16.05.2021 ஞாயிற்றுக்கிழமை நடைபெற தீர்மானிக் கப்பட்ட தும்பளை நெல்லண்டை அம்மன் தரும பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் என்பதனை தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என திருத்திக்கொள்ளப் படுகின்றது.

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
தரும பரிபாலன சபை.
06.05.2021

---

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில்

# இன்றிலிருந்து இயங்கவுள்ளது கொரோனா சிகிச்சை நிலையம்

வவுனியா, மே 11

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் 200 கட்டில்களைக் கொண்டதாக அமைக்கப்பட்ட கொரோனா சிகிச்சை நிலையம், இன்று தொடக்கம் இயங்கவுள்ளது என்று மாவட்ட செயலர் சமன் பந்துலசேன தெரிவித்தார்.

இங்கு 200 கொரோனா நோயாளர்களை தங்கவைத்து சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகளை இராணுவத்தினர் மற்றும் சுகாதாரப் பிரிவினர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்த சிகிச்சை நிலையத்துக்கு தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு, பாக்கியம் அறக்கட்டளை, அபிராமி உபாசகி, ராம் பவுண்டேசன் என்பன இணைந்து 30 மின் விசிறிகளை வழங்கியுள்ளன. நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும்போது அவற்றைப் பயன்படுத்த முடியும். - என்று மேலும் தெரிவித்தார்.

(த-18)

# கொரோனாத் தொற்று அதிகரிப்பில் இலங்கை கவனிப்புக்குரிய நாடு

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு, மே 11

தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் கொரோ னாத் தொற்றாளர் எண்ணிக்கையில் குறிப்பிடத் தக்க அதிகரிப்பு காட்டிய நாடுகளில் இலங்கையும் உள்ளது என்று உலக சுகாதார நிறுவனத்தின் தொற்று நோய்ப் பிரிவின் வாராந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் 2.7 மில்லி யன் தொற்றாளர்கள் புதிதாகக் கண்டறியப்பட்டுள் ளனர். 25 ஆயிரம் உயிரிழப்புக்களும் பதிவாகி யுள்ளன. இந்தியாவில் முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் அதிகளவான தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

அதிகூடிய இறப்புக்களும் பதிவாகியுள்ளன. மேலும் இலங்கை மற்றும் நேபா ளத்திலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது' என்று உலக சுகாதார நிறு வனம் தனது அறிக்கை யில் சுட்டிக்காட்டியுள்ளது.

(ஓ,5)

---

**முதலாம் பக்க தொடர்ச்சிகள்....**

### பிரதேச...

பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலாளருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலை யில், மாவட்டச் செயலகத்தில் பொதுமக்களுக்கான சேவைகள் இடையூறு இன்றி மட்டுப்படுத்தப்பட்ட அள வில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகத்தில் இயங்குகின்ற மோட்டார் வாகன திணைக்களம் வெளிநாட்டு பணியகம் மற்றும் பதிவாளர் நாயகம் பிரிவுகளில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் நடைபெறுகின்றன. மாவட்ட செயலகத் துக்கு வருவோர் தங்களுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் சேவைகளை செயலக வாசலில் உள்ள உத்தியோகத்தர்களிடம் எழுத்துமூலம் வழங்கும்பட் சத்தில் அவர்களுக்கான சேவைகள் பெற்றுக்கொடுக் கப்படும். மக்கள் இயலுமானவரை தங்கள் பிரதேச செயலகங்களில் தமக்கான சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாவட்ட செயலகத்தில் தமக்கான தேவைகளை பெற நாடுவோர் வாசலில் உள்ள முறைப்பாட்டு பெட்டியில் தமது தேவைப்பாடுகளை எழுதி இடுவதன் மூலம் உரிய அதிகாரிகளின் பதிலைப் பெற முடியும். மாவட்ட செயலகத்தில் சேவையை பெறுவதற்காக 021222 2355, 021222 2233 தொலைபேசி இலக்கம் ஊடாகவும் ga jaffna@sltnet என்ற மின்னஞ்சல் முக வரி ஊடாகவும் தொடர்புகொள்ள முடியும். என்றார்.

(எ-159)

### 2,573 பேர்...

நேற்று இரவு வெளியான அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

அதையடுத்து கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட வர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 479 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 4 ஆயி ரத்து 463 பேர் குணமடைந்துள்ளனர். 22 ஆயிரத்து 223 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(எ-22)

### இலங்கை வருகின்றது சீன ஒட்சிசன் சிலிண்டர்

இலங்கைக்கு ஒட்சிசன் சிலிண்டர் மற்றும் செயற்கை சுவாச கருவிகளை சீனா வழங்கவுள்ளது.

இது பற்றிய கோரிக்கையை இலங்கை கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் மூலம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கோரிக்கையை விடுத்தார்.

சீன தூதரகம் இந்த கோரிக்கையை ஏற்று வழங்குவதற்கு சாதகமாகப் பதிலளித்துள்ளார்.(த-இ)

---

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 03 . 1949



மறைவு 10 . 05 . 2021

## திரு சுப்பிரமணியன் ஜெகநாதன்

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவில் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியன் ஜெகநாதன் நேற்று (10.05.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியன் இரத்தினம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற மார்க்கண்டு திலகவதி தம்பதியரின் மருமகனும், கைலாச பிள்ளை சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவஞானவல்லி மற்றும் அருளானந்தபிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரஞ்சினி மற்றும் சாந்தினி, வசந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிரதீபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்), Dr. தயாழினி (பஞ்சகர்ம வைத்தியசாலை - புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், துசானி, (ஆசிரியர், கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் வித்தி யாலயம்), Eng தபேசன் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், லாகவி, ரித்திகா, பிருத்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2021) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கரையாம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மூத்தநயினார் கோவில் வடக்கு,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 10 - 1941



மறைவு 10 - 05 - 2021

## பிரான்சிஸ் சேவியர் வசந்தாதேவி (Baby)

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் சேவியர் வசந்தாதேவி நேற்று (10.05.2021) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் தங்கமுத்து தம்பதியினரின் மகளும், பிரான்சிஸ் சேவியரின் (பட்டாசுமாமா-செபம்) பாசமிகு மனைவியும், சரோஜினிதேவி (கனடா), கானகலாதேவி (கானம்-கொழும்பு), காலஞ்சென்றவர்களான யோகேந்திர-நாதன் (அப்புச்சி), மகேந்திரநாதன் (சின்னராசா) மற்றும் குணேந்திரநாதன் (துரை-ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், தர்சினி, சதீஸ்வரன் (சதீஸ்-பிரான்ஸ்), மதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிகலாவின் மாமியாரும், காலஞ்சென்ற தண்டாயுதம், நவரத்தினம் (கிச்சி), செல்வகுமாரி, ரத்தினேஸ்வரி, சரஸ்வதி, காலஞ் சென்ற அந்தோனிப்பிள்ளை, அலோசியஸ், சென்ஜோன் (துரை), இராயப்பு (அரசு), ஆசீர்வாதம், செல்வம், ரீற்றம்மா (ராசாத்தி), லூத்தம்மா (அன்பு), ஆரோக்கியநாதர் (விஜயன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், றொசான், தனஞ்சயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

கடந்த 09.05.2021 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்த எமது பாடசாலை ஆசிரியர் **திரு.க. பரமேஸ்வரன்** அவர்களின் பாசமிகு துணைவி

**திருமதி ரஞ்சினிதேவி பரமேஸ்வரன்**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை


# சாரதி அனுமதி பத்திரங்களுக்கு சலுகைக்காலம்

கொழும்பு, மே 11

காலாவதியாகும் அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கும் சலுகைக்காலத்தை வழங்க மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைவாக ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் எதிர்வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரையான காலகட்டத்தில் காலாவதியாகும் அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கும், காலாவதி திகதியிலிருந்து மேலும் 6 மாதங்கள் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. (ம4)

# கல்வி அமைச்சின் அலுவலகம் பூட்டு!

யாழ்ப்பாணம், மே 11

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகம் மூடப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அங்கு பணியாற்றும் பணியாளர்கள் சிலருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்தே அலுவலகம் மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது கொரோனாத் தொற்றாளர்கள் பலர் சமூகத்துக்குள் இருந்து அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அரச மற்றும் தனியார் நிறுவனப் பணியாளர்கள் பலர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ-இ)


# மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்




திருமதி **ஸ்ரீபவானி சக்திகுமாரன்**
ஆசிரியர்
(யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)

**சேவை விபரம்:**

- யா / தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை - (18.03.1998 - 31.08.2000)
- கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை - (01.09.2000 - 01.09.2002)
- தி / சென் மேரிஸ் கல்லூரி - (02.09.2002 - 30.07.2011)
- வ / பூந்தோட்டம் ம.வி - (01.08.2011 - 08.12.2011)
- யா / புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் - (09.12.2011 - 10.05.2021)

எமது பாடசாலையில் பகுதித்தலைவராகவும் வகுப்பாசிரியராகவும் 10 ஆண்டு காலம் சேவையாற்றி இன்று (11.05.2021) அகவை 60 இல் காலடி வைக்கும் திருமதி ஸ்ரீபவானி சக்திகுமாரன் அவர்களின் சேவையைப் பாராட்டி உளமார நன்றியைத் தெரிவிப்பதுடன் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடன் நீடூழி வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலை சமூகம்
(யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**செல்லம்மா நடராசா**

தாயின் மடியில்
03.04.1931

இறைவன் அடியில்
22.04.2020

*காலம் எல்லாம் எம்மைச் சுமந்து வாழவைத்தீர்.*
*நோய் என்று படுக்கவில்லை, ஒரு நொடியும் ஓய்வதுமில்லை.*
*விண்ணாடு சென்றிருந்தாலும் உம் அன்புக்கு விலை பேசமுடியாது.*
*கண்ணின் மணிபோல் மனதில் நிறைந்தவர் மறைந்தால்*
*எமக்காக உரிமையுடன் யார் இனி ஆறுதல் சொல்வது? அன்புத் தாயே!*
*நயம்பட சிரித்துச் சிரித்து எல்லோருடனும் உறவாடிய*
*நாளெல்லாம் கழிந்த நினைவுகள்*
*நித்தமும் ஆயிரம் நிழலாடுகிறது.*
*தாங்க முடியவில்லையே ...*

உங்கள் பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர், ஐயப்ப பக்தர்கள் மற்றும் நண்பர்கள்.

உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல குரும்பசிட்டி சித்தியைக் கொடுக்கும் சித்தி விநாயகரும், முத்தான முத்துமாரி அம்மனும், முதலியார் வையிரவர் துணையுடனும், ஐயப்பன் அருள் வேண்டி அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: சுலோ - [illegible]
ராணி- 61 414 191 011


# மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. TR/29/20

குடியியில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல்

1. ஆறுமுகம் சிவகுமார் (தலைவர்)
2. நடேசலிங்கம் ஜெகதீபன் (உபதலைவர்)
3. கார்த்திகேசு சிவஞானசுந்தரம் (செயலாளர்)
4. கந்தையா அருள்லிங்கம் (உப செயலாளர்)
5. செல்லத்துரை மகேந்திரராசா (பொருளாளர்)
6. தர்மராசா தீனேஸ்
7. தில்லைக்கோன் பிரணவதாஸ்
8. சோதிலிங்கம் சதீஸ்
9. கந்தையா மகேந்திரன் அனைவரும் கூடத்து மனோண்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள்

**மனுதாரர்கள்**

இவ் வழக்கானது மேற்படி மனுதாரர்களினால் கௌரவ இம் மன்றில் 23.06.2020 ம் திகதி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் பிரதான நிவாரணமாக வேண்டப்பட்டவாறு "மனுவில் விபரிக்கப்படுவதும், கூடத்து மனோண்மணி அம்மாள் ஆலயத்திற்கு உரித்தான ஆதனங்களிற்கு மனுதாரர்களே என்ற ஒப்படைப்பு கட்டளை (westing order) உரித்துடையவர்கள்"" என்ற கட்டளை கோரியுள்ளமையால்

மேற்படி ஆலயத்துடன் தொடர்புடைய எவரும், எதிர்வாதிட அக்கறையுள்ள எவரும் இதன் பின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்கள் தொடர்பில் அல்லது மேலே மனுதாரர்களால் கோரப்பட்ட நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் 25.05.2021ம் திகதி காலை 9.00 மணிக்கு கௌவர மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

நீதிமன்ற கட்டளைப்படி

வரைவு
மனுதாரரின் சட்டத்தரணி
K. Keerthana LL.B (Hons)

பதிவாளர்
District/Magistrate's Court,
Mallakam

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்**

**வழக்கு இலக்கம்: நம்பிக்கைச் சொத்து 29/2020**

**ஆதன இடாப்பு**

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குபகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை கிழக்கு இறை " மலப்பைவளவு" பர.நில 7. இதற்குள் அமையும் சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயம். இதற்கு எல்லை கிழக்கு துரைசிங்கம் பெண் செல்வராணிக்குரிய ஆதனம். வடக்கு பிரதான வீதி. மேற்கு கையொழுங்கை. தெற்கு குறித்த செல்வராணிக்கும் கந்தையா பாலசிங்கத்துக்குமுரிய ஆதனங்கள் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
2. மேற்படி சங்கானை கிழக்கு இறை" வேலிலோவத்தை " பர.நில இலா.20 ம் பனைகளும். இந்தப் பரப்பு சிலை இலாச்சம் இருபதுக்கும் எல்லை கிழக்கு குமாரசாமி சண்முகரத்தினத்திற்கும் செல்லத்துரை மகேந்திரராசாவுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு வயிரமுத்து நேருவின் ஆதனம் . மேற்க தபாற் கந்தோர் வீதி. தெற்கு நடராசா மகேந்திரனுக்கும் தம்பிராசா ஜெய்சிங்கத்திற்குமுரிய ஆதனங்கள். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
3. மேற்படி சங்கானை கிழக்கு இறை " மலப்பைவளவு" பர.நில .இலா.12.இதற்கு எல்லை கிழக்கு செல்லையா சிவ பாக்கியத்தின் ஆதனம். வடக்கு நவரட்ணம் துரைசிங்கத்தின் ஆதனம். மேற்கு சண்முகம் கனகரத்தினத்தின் ஆதனம். தெற்கு முருகமூர்த்தி கோவில் ஒழுங்கை. இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
4. மேற்படி சங்கானை கிழக்கு இறை 'வெல்வில்வளவு" பர. நிலை. இலா.10 - இதற்கு எல்லை கிழக்கு றோட்டு. வடக்கு நல்லதம்பி செல்வராசாவின் ஆதனம் - மேற்கு இராசையா பெண் கனகம்மாவின் ஆதனம். தெற்கு தேவாலய வீதி. இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
5. மேற்படி சங்கனை கிழக்கு இறை "புதுரன்குளி" பர.நிலை. இலா 15ம் கிணறும் . எல்லை கிழக்கு சின்னையா இரத்தினத்தின் ஆதனம். வடக்கு ஒழுங்கை - மேற்கு சின்னையா இரத்தினத்தின் ஆதனம். தெற்கு கதிரன் முத்தனின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
6. மேற்படி சங்கானை கிழக்கு இறை " மடத்துவளவு" பர.நிலை. இலா.02ம் - வீடும். இதற்கு எல்லை கிழக்கு தேவாலய வீதி. வடக்கு பிரதான வீதி. மேற்கு பொன்னையா நவரத்தினத்தின் ஆதனம். தெற்கு முத்தையா
7. ஐயாத்துரையின் ஆதனம்.இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
மேற்படி சங்கானை கிழக்கு இறை "கலட்டி"பர். நிலை.இலா 10. இதற்கு எல்லை கிழக்கு நன்கொடை பெறுனரின் ஆதனம். வடக்கு பிரதான வீதி. மேற்கு தேவாலய வீதி. தெற்கு சிவகுமாரன் பெண் செல்வராணிக்கும் மறுபேருக்குமுரியவாதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
8. மேற்படி சங்கானை கிழக்கு இறை " தானாவோடை" பர.நெ. இலா.16 இதற்கெல்லை கிழக்கு கந்தையா செல்லத்துரையின் ஆதனம். வடக்கு ஆறுமுகம் நாகலிங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு சண்முக தம்பையாவின் ஆதனம். தெற்கு வல்லிபுரம் சண்முகநாத முதலிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
9. மேற்படி சங்கானை கிழக்கு இறை "எல்லைப்புலம்" பர.நெ. இலா.02.இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் சிவநேசன் பெண் பத்மராணியின் ஆதனம். மேற்கு சுந்தரம்பிள்ளை நாகேஸ்வரியின் ஆதனம். தெற்கு நடராசா பெண் தனலட்சுமியின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
10. மேற்படி சங்கானை கிழக்கு இறை " எல்லைப்புலம்" பர.நெ. இலா.02. இதற்கு எல்லை கிழக்கு சுந்தரம்பிள்ளை நாகேஸ்வரியின் ஆதனமும் தம்பிநாதர் சபாபதியின் ஆதனமும். வடக்கு சிவநேசன் பெண் பத்மராணியின் ஆதனம். மேற்கும் தெற்கும் தம்பிநாதர் செல்வநாயகத்தின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
11. மேற்படி சங்கானை கிழக்கு இறை "தானாவோடை" பர. நெ.இலா.20.இதற்கு எல்லை கிழக்கு ஆறுமுகம் நாகலிங்கத்தின் ஆதனம். வடக்கு ஆறுமுகம் சண்முகநர்தமுதலிக்கும் கமலநாதன் நாகேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள். மேற்கு மாரிமுத்து நாகம்மாவின் ஆதனம். தெற்கு கந்தையா சண்முக தாசனின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
12. மேற்படி சங்கானை கிழக்கு இறை " கரைச்சி " பர. நெ.இலா.20. இதற்கு எல்லை கிழக்கு வாய்கால். வடக்கு வல்லிபுரம் சின்னத்துரையின் ஆதனம். மேற்கும் தெற்கும் எஸ் சிவஞானத்தின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
13. மேற்படி சங்கானை கிழக்கு இறை " ஆலங்கடல்" பர.நிலை.இலா.12. இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் எஸ் சிவஞானத்தின் ஆதனம். மேற்கு நல்லதம்பி செல்வராசாவின் ஆதனம். தெற்கு சுப்பு நாகலிங்கத்தின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.
14. மேற்படி சங்கானை கிழக்கு இறை " கலட்டி" நிலப்பரப்பு 13 1/4. இதற்கு கிழக்கு ஒழுங்கை நிலம். வடக்கு யாழ் பிரதான வீதி. மேற்கு இதன் மிகுதி ஆதனம். தெற்கு சிவகுமாரன் செல்வராணியினதும் மறுபேரினதும் ஆதனம். தெற்கெல்லையில் இதனுள் அடங்கும் அரைவாசிக் கிணறும் மற்றும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

நீதிமன்ற கட்டளைப்படி

வரைவு
மனுதாரரின் சட்டத்தரணி
K. Keerthana LL.B (Hons)

பதிவாளர்
District/Magistrate's Court,
Mllakam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்...

இந்த வழிபாடுகளைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் இன்று புதிய விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் வெளியிடுகின்றனர்.

அந்தப் பகுதியில் புராதன பௌத்த விகாரை சிதைவுகள் உள்ளன என்று தெரிவித்து தொல்லியல் திணைக்களம் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டிருந்த நிலையில் இந்த வழிபாட்டு நடவடிக்கைகள் திடுதிடுப்பென ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் ஜெகத் சுமதிபால வந்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதிக்கு ஊடகவியலாளர்கள், மக்கள் அனுமதிக்கப்படாமையால் சரியான விவரங்களைப் பெறமுடியவில்லை.

தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதை அடுத்து ஒன்றுகூடி வழிபாடுகள் மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலைமையில் மாவட்ட நிர்வாகத்துக்கோ, சுகாதாரத் தரப்பினருக்கோ தெரியப்படுத்தாது பெரும் எண்ணிக்கையானோருடன் இந்த வழிபாடுகள் நேற்றிரவு ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டன.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமைப் படை அதிகாரி மற்றும் சுமார் 30 பௌத்த பிக்குகள், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் இணைந்து தோரணங்கள் கட்டி, பந்தல்கள் அமைத்து இந்த வழிபாடுகள் நடத்தப்பட்டன என்று தெரியவருகின்றது.

மாவட்ட நிர்வாகத்தினரோ, சுகாதாரத் தரப்பினரோ இது தொடர்பில் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஏ-இ)

## யாழ்ப்பாணத்தில்...

அதிகாரி பிரிவில் எழுமாறாக சிலரிடம் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் நால்வருக்கு கோரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆய்வுகூடத்தில் 778 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 36 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 2 பேர் கோரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 5 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் பண்டத்தரிப்பு ஆயுர்வேத மருத்துவமனை பணியாளர்கள்.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் நெல்லியடி கடைத் தொகுதியில் எழுமாறாகப் பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் வெதுப்பக பணியாளர். மற்றையவர் அண்மையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து வீடு திரும்பியவர்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 22 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 18 பேர் ஏற்கனவே தொற்றாளர்களுடன் முதல்நிலை தொடர்பாளர்களாக இருந்து சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள். ஏனைய நால்வரும் எழுமாறாக சிலரிடம் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஏ-26)

## நாட்டின்...

டத்தை கூட்ட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

கொரோனா வைரஸ் பரவலின் முதலாவது அலையின்போது அரசு, சர்வக்கட்சி கூட்டத்தை கூட்டியது. எதிர்க்கட்சியின் சார்பில் தலைவர் சஜித் பிரேமதாசவும், செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் பங்கேற்றனர். இரண்டு கூட்டங்களுக்கு மாத்திரமே அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. முதலாவது அலையை சிறப்பாக கட்டுப்படுத்துகின்றோம், அதனால் முழு புகழும் அரசுக்கே கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிர்க்கட்சிகளை அரசு இவ்வாறு புறக்கணித்திருக்கக்கூடும்.

ஆனால் இன்று என்ன நடக்கின்றது?. வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதில் அரசு தோல்வி கண்டுள்ளது. இந்தநிலைமை தொடருமானால் நெருக்கடியான நிலைமை உருவாகக்கூடும். மக்களை பாதுகாத்து, நாட்டை மீட்டெடுக்க வேண்டும்.

இதற்காக சர்வக்கட்சி தலைவர் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கவும். யோசனைகளை, ஆலோசனைகளை உள்வாங்கவும். நாட்டை மீட்க இணைந்து செயற்படுவோம். பிறகு அரசியல் செய்யலாம். என்றார். (ஏ-44)

## மாகாணங்கள்...

களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இந்தக் காலப் பகுதியில் வியாபார நிலையங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட அளவினர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றும், பொதுமக்கள் ஒன்றுகூடுதல் மற்றும் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஏ-இ)

## நாட்டை...

நாட்டில் கொரோனாத் தொற்று நிலைமை தீவிரமடைந்துள்ள நிலையில், நாளாந்தம் 2 ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்படும் நிலையிலும், தொற்றைக் கட்டுப்படுத்த முக்கியமான முடிவுகள் நேற்று எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், நாடு முடக்கப்படாது என்று அரசு அறிவித்துள்ளது.

நாட்டை முடக்கும் தீர்மானம் எடுக்கப்படாதபோதும், மாகாணங்களுக்கு இடையே தேவையற்ற நடமாட்டத்தை தடுக்க எதிர்காலத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று கொவிட் ஒழிப்புச் செயலணியின் தலைவர் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மாவட்டங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவது உட்பட மக்களின் அத்தியாவசியத் தேவைகள் எந்தவித இடையூறும் இன்றி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்களைச் சேமிப்பதற்காகக் கடைகள், பல்பொருள் அங்காடிகள் போன்றவற்றில் நீண்ட வரிசைகளை ஏற்படுத்த வேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொவிட் தடுப்பூசிகளை துரிதமாக வழங்குவதற்கு முப்படைகளையும் கடமைக்கு அமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கொவிட் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்படும் பகுதிகளில் தடுப்பூசி வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

## தொற்று...

சிகிச்சை முகாமில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டுள்ளனர் என்றும், அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பல தரப்பினரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சத்திரசிகிச்சை முகாமில் அநுராதபுரம், பொலனறுவை போன்ற இடங்களில் இருந்து பெருமளவிலான மக்கள் கலந்துகொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சத்திர சிகிச்சை முகாம் நேற்று முதல் 14ஆம் திகதிவரையும், 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரையும், 24ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரையும் நடைபெறும் என்றும், சத்திரசிகிச்சை முகாமில் ஒவ்வொரு தினமும் 200 வரையானோர் பங்குபற்றுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நிலைமையால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பல சத்திர சிகிச்சைகள் ஒத்திவைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படும் நிலையில், வெளிமாவட்டத்தவர்களை அழைத்து, பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளாது சத்திர சிகிச்சைக்கு உட்படுத்துவது தொடர்பில் பலர் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். (ஏ-5)

## அரசின்...

நிலைமை மோசமடையக்கூடும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, அரசிடம் அவசர கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விசேட காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது

நாம் இன்று நெருக்கடியான நிலையை எதிர்கொண்டுள்ளோம். மக்களின் சுகாதார பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கொரேனா வைரசும் வேகமாகப் பரவி வருகின்றது. மறுபுறத்தில் தடுப்பூசி மற்றும் ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. கட்டில்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

நாளுக்கு நாள் வைரஸ் தொற்று வேகமாக பரவிவருகின்றது. மருத்துவர்களின் ஆலோசனைகளின்படி சரியான தீர்மானங்களை எடுக்காவிடின் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும்.

அமெரிக்காவிலுள்ள வொஷிங்டன் பல்கலைக்கழக அறிக்கையொன்றின் பிரகாரம், நாளுக்கு நாள் நிலைமை மோசமாகும் என்பதுடன் ஜூன், ஜூலை மாதங்களில் நாளொன்றுக்கு 200 பேர் வரை மரணிக்கும் நிலை ஏற்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த நெருக்கடியான நிலையில் நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

இது அரசின் பெயரை தக்கவைத்துக் கொள்ளும் போராட்டம் அல்ல. அரசியல் போராட்டமும் அல்ல. உண்மையில் மக்களின் உயிர்களைக் காப்பாற்றும் போராட்டமே இது. அரசை மாற்றுமாறு நாம் கோரவில்லை. அரசமைப்பின் பிரகாரம் அமைச்சரவைக்கே பொறுப்பு இருக்கிறது. ஜனாதிபதியும், அமைச்சரவை அமைச்சர்களும் தங்களின் கைகளுக்கு அதிகாரங்களை எடுத்து செயற்படவேண்டும். தற்போதுள்ள குழுக்கள் தோல்வியடைந்துள்ளன. இவை தொடர்பாக ஏற்கனவே கூறியிருந்தோம். எனினும், எதனையும் கண்டுகொள்ளவில்லை. பொதுமக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அதிகாரங்களை அமைச்சரவையும் ஜனாதிபதியும் பொறுப்பேற்க வேண்டும்.

இந்தவாரமே எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சு நடத்துங்கள். அவர்களின் யோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்ளுங்கள். அவர்களும் அந்த ஒத்துழைப்பை வழங்க வேண்டும். உடனடியாக செயற்பட வேண்டும். இல்லையெனில் பல உயிர்களை இழக்க நேரிடும். பொதுமக்கள் குறித்து அக்கறை இருக்குமாயின், அமைச்சரவை இதனை பொறுப்பேற்க வேண்டும். அவர்களுக்கு இதுகுறித்து அனுபவம் இருக்கிறது. இதன்படி நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் விசேடமாக வேண்டுகோள் முன்வைக்கிறேன். என்றார். (ஏ-44)

## மாணவர்கள்...

யோரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் மாணவி ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அந்த வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 6 மாணவர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 14 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 22 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குக் கடந்த சனிக்கிழமை தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அவர்களுடன் தொடர்பைப் பேணிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த முடிவுகள் நேற்று வெளியான நிலையில் 14 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை கிளிநொச்சியில் 36 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். (ஏ-214)

## நெல்லியடியில்...

கொரோனாத் தொற்றுப் பலருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். அந்த வெதுப்பகத்தை மூடும் நடவடிக்கைகள் நேற்றிரவு சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது.

வெதுப்பகத்தில் பணியாற்றியவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும், அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஏ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதார தொண்டர்கள் போராட்டம்

**யாழ்ப்பாணம், மே 11**

**வடக்கு மாகாணத்தில் தற்காலிக சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிய 970 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி ஆளுநர் செயலகம் முன்பாக நேற்று திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**




போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்;

போர்க் காலத்தில் சேவையாற்றிய 840 பேர் சுகாதாரத் தொண்டர்களாக வடக்கு மாகாண சபையால் உள்வாங்கப்பட்டனர்.

பின்னர் வடமாகாண முன்னாள் ஆளுநர் கூரே காலத்தில் 130 பேர் சுகாதார தொண்டர்கள் தற்காலிகமாக கடமையாற்றிய நிலை யில் அவர்களையும் இணைத்து 970 சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் கேட்டுப் போராடி வருகிறோம். சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகத் தேர்வு இரு தடவைகள் இடம்பெற்ற நிலையில் ஊழல்கள் இருக்கின்றன என நாம் அறிகிறோம். இறுதிப் போரின்போது கடமையாற்றிய சுகாதாரத் தொண்டர்கள் இறுதியாக இடம்பெற்ற நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படவில்லை.

எம்முடைய சகல ஆவணங்களும் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட நிலையில் நேர்முகத் தேர்வுக்கு எம்மை அழைக்காமை பெரும் ஏமாற்றத்தைத் தருகின்றது. ஆகவே வடமாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாக நிரந்தர நியமனம் கேட்டு விண்ணப்பித்த 970 பேருக்கும் குறித்த நியமனத்தை பாகுபாடின்றி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் என்றனர். (ஐ-20)

## விபத்தில் சிக்கிய இளைஞர்கள் காயம்

மிருசுவில் கெற்பேலி பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கி இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. மிருசுவில் வடக்கைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரும் 17 வயதுடைய இளைஞருமே விபத்தில் காயமடைந்தனர். (ச-9)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.**

**யாழ் நகரிலிருந்து 1½ km தூரம்**

**(பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)**

தொடர்பு: 077 468 3354, 077 288 0152
074 075 4204

யாழில் No.1 ஆங்கிலப்பயிற்சி மையம்

A/L பரீட்சையின் பின் உயர்கல்வி கற்கவிருக்கும் மாணவர்களுக்கான விசேடமாக வடிவமைக்கப்பட்ட Zoom + LMS ஊடான ஆங்கில கற்கைநெறி

ZOOM ONLINE LEARNING

DMI COMPUTER EDUCATION

DIPLOMA IN ENGLISH

SPOKEN ENGLISH

Reading Writing Speaking Listening

Call now 0777173517 0777240707

அனைத்து கிளைகளிலும் ஒரேநேரத்தில் பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்

ஆரம்பம் 17 / 5 / 2021 உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு

யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் |

Mon,Wed,Fri - 10 a.m.
Sat,Sun - 3 p.m.

DMI COMPUTER EDUCATION

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1952



மறைவு 10 . 05 . 2021

### திருமதி பாலசுப்பிரமணியம் சிவனேஸ்வரி

உரும்பிராய் கிழக்கு உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் சிவனேஸ்வரி நேற்று (10.05.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசுப்பிள்ளை ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சசிகுமாரன், நந்தகுமாரன் மற்றும் புஸ்பவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சரஸ்வதி, சிவயோகம் மற்றும் கனகாம்பிகை, சிதம்பரநாதன் ஆகியோரின் மைத்துனியும், தயாரூபி (கனடா), தயாநிதி, தயாழினி (கனடா), பாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகேந்திரன், குலேந்திரன், சத்தியமூர்த்தி, விஜிந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், றெஜிசன், அருணியா, நிறோசன், கஜீவன், மதுஷன், தேனுஷா, அஸ்வினி, அனுசியா, எந்துஷன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2021) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று, உரும்பிராய் இளங்காட்டு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொலைபேசி இல:**
**077 355 6091 (மகள்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## இரண்டாம் ஆண்டு நினைவில் எம் குலவிளக்கு



### அமரர் செல்லத்துரை பரமானந்தம்

**(வீடியோ ஆனந்த் ஸ்ரூடியோ- மானிப்பாய்)**

11.05.2019 அன்று இறைபதம் பெற்ற எம் தந்தையின்
இரண்டாம் ஆண்டு நினைவுகளை சுமந்து

*அன்பின் இலக்கணமாம் அறிவின் விருட்சமான தந்தையே*
*பற்றும் பாசமும் மீதுரப் பெற்று வாழ்ந்தீர்*
*ஆறுதல் பலகூறி அரவணைத்த அப்பா*
*ஈராண்டு கடந்தது என்று நினைக்கையில்*
*ஈரவிழி காயவில்லை நினைவுகள் மறையவில்லை...*

*பண்பானவராய் மானியம்பதி மட்டுமன்றி பலபிரதேசம்*
*வண்ணமாய் புகைப்பட கலைஞராய் வலம் வந்தீர்*
*புன்சிரிப்பும் நேரிய பேச்சும் ஒன்றிணைந்த போக்கும்*
*மழலைகள் போலிருந்தீர், அறிவுரைகள் பலகூறி வளர்த்தீர்*
*"டாடி" என அழைத்திட முத்தமிட்ட தந்தையே...*

*எம்மை விட்டு நீங்கள் பிரிந்து போனாலும்*
*நித்தம் நித்தம் நடமாடும் தன்மையை காண்கிறோம்*
*கண்ணை இமை காப்பது போல காத்தீர்களே*
*காலனும் வந்துமை கடத்தி ஈராண்டுகள் கடந்ததுவோ*
*காலங்கள் கடந்தாலும் எம் இதயங்கள் கனக்கின்றது...*

*குடும்பம் நலம் வாழ உழைத்திட்ட நாயகன்*
*சமூகத்திற்கு ஆற்றிய பணியும், அன்பு மனைவியும்*
*பிள்ளைகளும் பரிதவிக்க சிவபதம் பெற்றீரப்பா*
*மானிடனாய் மலர்ந்த நாளிலிருந்து மாண்புடன் வாழ்ந்தீர்*
*"ஆனந்தன்" எனும் நாமம் சிவப்பொருளில் பரமானந்தம் பெற்றதப்பா*

*ஓம் சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!*

**சங்குவேலி தெற்கு,**
**மானிப்பாய்.**

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூ... ...ந்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.